# அறவழி

NONVIOLENCE

**அற முரசு**

பிரார்த்தனையுடனும் நல்லெண்ணத்துடனும் ஆரம்பிக்கப்பட்ட முயற்சி வீண்போகாது. மனிதனின் வெற்றி, முயற்சியில் தானிருக்கிறது. பலனோ இறைவனின் கையில் இருக்கிறது.

— காந்தியடிகள்.

அறம் 2 ★ மா இதழ் ★ 1989 தை ★ பக்கம் 8 ★ விலை 3-00 ★ வழி 17

# 1995ஐ அறவழி ஆண்டாகப் பிரகடனப்படுத்தவும்.

## ஐக்கிய நாடுகள் சபையிடம் அறவழி இயக்கம் கோரிக்கை

அழிவின் விளிம்புக்குச் சென்று கொண்டிருக்கும் மனித சமுதாயத்தைப் பாதுகாக்கவும். மனிதர்கள் மத்தியில் அன்பு. அமைதி; அறவழி போன்ற காத்திரமிக்க கொள்கைகளைத் திட்டமிட்டுப் பரப்பவும், அவற்றின் பிரகாரம் தத்தமது வாழ்க்கைகளை நடாத்த வழிவகைசெய்ய உதவும் பொருட்டு, ஐக்கிய நாடுகள் சபையானது 1995ஆம் ஆண்டை அறவழி ஆண்டாகப் (Year of Nonviolence) பிரகடனம் செய்யவேண்டும்.

இவ்வாறு அறவழிப் போராட்டக் குழு ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அறவழிப் போராட்டக் குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸால் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில், ''உலகில் சத்தியம் மறைக்கப்பட்டு, போலித்தனமும், வன்செயலும் பெருகிவருகின்றதன் காரணமாக மனிதன்—மனிதனை போர்க்கருவிகளின் துணை கொண்டு அழித்து வருவதைத் தடுத்து நிறுத்தவும், மக்கள் மத்தியில் நிரந்தரமான சமாதானமும், சகவாழ்வும் உருவாக்குவதற்கு இவ்வாறான பிரகடனம் வழிவகுக்கும்'' எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பிரகடனத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வண்ணம், அறவழி இயக்கம், பல சர்வதேச அமைப்புகளின் சிபாரிசுகளையும் பெற முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

## வாசகர்களின் கவனத்துக்கு!

எமது சக்திக்கு அப்பாற்பட்ட சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக 1987 புரட்டாதி மாதத்தின் பின் எமது பத்திரிகையை வெளியிட முடியாமல் போய்விட்டது. பத்திரிகைப் பணியைத் தொடரவேண்டும் என்ற எண்ணத்துடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முயற்சிகள் பலன்கொடுத்துள்ளன. அதன் பேறாகவே எம்பணி மீண்டும் ஆரம்பித்துள்ளது.

''ஏன் 'அறவழி' வெளியிடப்படவில்லை?'' எனக் கேட்டு பல உள்நாட்டு—வெளிநாட்டு வாசக அன்பர்கள் கடிதங்கள் மூலமும், நேரிலும் கேட்டிருந்தனர். வாசக அன்பர்களின் அக்கறை, ஆர்வத்தையிட்டு நாம் மகிழ்வடைந்தோம். அறவழி மீண்டும் வெளிவரத்தொடங்கியுள்ளது என்ற செய்தி வாசகர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் என்பது நம்பிக்கை.

எமது ஸ்தாபனமாகிய அறவழிப் போராட்டக் குழுவின், வெளியீட்டுப் பிரிவுத் திட்டமாகிய 'புதிய சமுதாய வெளியீட்டகத்தின்' வெளியீடாக ''அறவழி'' இப்போது வெளியிடப்படுகின்றது.

பத்திரிகைத்தாள் விலை உயர்வு, அச்சுக் கூலி அதிகரிப்பு காரணமாக இவ் இதழ் முதல் 'அறவழி'யின் விலையை மூன்று ரூபாவாக ஆக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இவ் விலைஉயர்ச்சியைப் பெரிதுபடுத்தாமல், வாசகர்கள் எம் பணிக்கு நிறைவான ஆதரவை அன்புடன் வழங்கி, எம் பணிகள் வளர்ச்சி அடைய உதவிடும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

மக்கள் மத்தியில் நல்ல எண்ணங்களையும் சிந்தனைகளையும் வளர்த்திடவும், பரப்பிடவும் 'அறவழி' அதன் பங்களிப்பைத் தொடரும் என்பது உறுதியாகும்.

— ஆசிரியர்

## மனித உரிமைகளை மக்கள் அன்றாட வாழ்வில் அனுபவிக்கும் நிலை ஏற்படவேண்டும்

**புத்தக வெளியீட்டு விழாவில் அறவழி இயக்கத் தலைவர் உரை**

''மனித உரிமைகள்'' சாசனம் சர்வதேச ரீதியானது. மனித உரிமைகளை மக்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும், மதிக்கவேண்டும் என்ற அடிப்படை அறிவு. அனுபவம் மக்கள் மத்தியில் இல்லாமல் இருப்பதன் காரணமாக, மக்கள் வாழ்வில் தமக்கிருக்கும் உரிமைகள், கடமைகள் எவையெவை என அறியாமல் இருக்கின்றனர். இந்த நிலையை மாற்றி, மனித உரிமைகள் பற்றிய பூரண அறிவையும், தெளிவு நிலையையும் ஏற்படுத்திக் கொள்வதன் மூலம், அவற்றினை மக்கள் தம் அன்றாட வாழ்வில் அனுபவிக்கும் நிலை ஏற்படவேண்டும்.'

இவ்வாறு அறவழிப்போராட்டக் குழுவின் தலைவர் திரு. வீ. எஸ். துரைராஜா, அறவழி பணியகத்தில், புதிய சமுதாய வெளியீட்டகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ''மனித உரிமைகள் ஓர் கைந்நூல்'' வெளியீட்டு விழாவில் தலைமைவகித்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

இக்கைந்நூலின் முதல்பிரதியை வைத்தியக் கலாநிதி பே. பிலிப்ஸ் ஜே. பி. செயலாளர் திரு. க. ஜீவகதாஸிடம்இருந்து பெற்றுக்கொண்டார்.

இவ்விழாவில் கைந்நூல் பற்றிய ஆய்வுகளை பண்டிதர் செ. சிவலிங்கம், திரு. கே.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்த்தினர்.

பண்டிதர் சிவலிங்கம் தமது ஆய்வுரையின்போது, ''மனித உரிமைகள் என்றால் என்ன? என சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் கூட மிக இலகுவில் வாசித்து அறிந்துகொள்ளகூடிய வகையில் இக்கைந்நூல் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது எனவும், எமது எதிர்காலச் செல்வங்கள் இதனை அவசியம் அறிந்துகொள்கின்ற நிலையை ஏற்படுத்தவேண்டும்'' என்றும் கூறினார்.

திரு. கோபாலகிருஷ்ணன் தமது ஆய்வுரையின் போது, மனித உரிமைகள் சாசனம் என்பது ஒரு பெரிய மாளிகை போன்றது. இம்மாளிகையில் இருக்கக்கூடிய அறைகளை இன்னமும் எந்த நாடும் தான் சரியாக அறிந்துகொள்ளவில்லை எனவும், இக்கைந்நூலானது இம்மாளிகைக்குச் செல்வதற்கான ஒரு நுழைவாயிலாக அமைந்திருப்பது பாராட்டுக்குரியது என்றும், தமிழ் இனத்தின் எதிர்கால நலன் கருதி வெளியிட்ட இக் கைந்நூலுக்காகவேண்டி எமது இனம் இவ் வெளியீட்டகத்தாருக்கு என்றும் நன்றி உடையவர்களாக இருக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவ்வெளியீட்டு விழாவின் போது குடாநாட்டின் பல கிராமங்களில் இருந்தும் தொண்டர்கள் பிரசன்னமாகி இருந்தார்கள்.

திருவாளர்கள் எஸ். நடேசபிள்ளை, ஐ. கணேசன் ஆகியோர் கைந்நூல்பற்றிய தமது கருத்துரைகளை வழங்கினர்.

திரு. சண். காளிதாஸ் நன்றியுரை கூறினர்.

அறவழி வாசகர்கள்
அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
இதயபூர்வமான
புத்தாண்டு வாழ்த்துக்கள்

---

அன்பு, அமைதி, அறவழி
சமுதாயத்தில்
மேலோங்கப் பிரார்த்திப்போமாக!

**இலங்கையில் வெளியிடப்படும் ஒரேயொரு அறவழி இதழ்**

# பெற்றோரே! சிறுவர்களுக்கு விளையாட்டுப் போர்க்கருவிகளை வழங்காதீர்கள்!

வன்செயல் கொடியது. வன்செயல் எண்ணங்கள், உணர்வுகள் வளர்ந்து வரும் எமது எதிர்கால செல்வங்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல வழிவகுக்கும்.

எனவே பெற்றோரே — உங்கள் பிள்ளைகள் தமக்கு விளையாட்டுப் போர்க் கருவிகளை வாங்கித் தரும்படி அடம்பிடித்தால், அவர்களுக்கு போர்க் கருவிகள் உலகில் ஏற்படுத்தும் தாக்கங்கள், அழிவுகள் பற்றி எடுத்துக் கூறுங்கள்.

போர்க் கருவிகளைப் பயன்படுத்துவதால் மனித வர்க்கம் அழிந்துபோகின்றது. போர்க் கருவிகளைப் பாவித்து மனித சமுதாயத்தின் பிரச்சனைகள், முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்படக்கூடாது என்பதையும் வலியுறுத்துங்கள்.

விளையாட்டுப் போர்க்கருவிகள் வாங்குவதில் செலவிடப்படும் பணத்தைக் கொண்டு, உங்கள் பிள்ளைகளுக்கு கல்வியை வளர்க்கக்கூடிய, அவர்களது சிந்தனை ஆற்றலைப்பெருக்கக்கூடிய விளையாட்டுக் கல்வி உபகரணங்களை வழங்குங்கள்.

அதன்மூலம், உங்கள் பிள்ளைகளின் திறமைகள் வெளிப்படும், பெருகும். அதன் காரணமாக, உங்கள் பிள்ளைகள் அறிவு சார்ந்த வகையில், சிந்திக்கத் தொடங்குவார்கள். ஆக்கப் பணிகளில் ஈடுபட அவர்களின் மனம் ஆவல்கொள்ளும்.

சிறுவர்கள் மத்தியில் ஆக்க வழிப்பட்ட சிந்தனைகளும், செயல்களும் வளர்ச்சியடைய பெற்றோர்கள் கூடிய கவனம் எடுத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

தமிழ் சிறுவர்கள் மத்தியில் விளையாட்டுப் போர்க்கருவிகள் பற்றிய நினைப்பே ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது சமூக சேவையாளர்களின் பங்களிப்பாக இருத்தல் வரவேற்கத்தக்கதாகும்.

விளையாட்டுப் போர்க்கருவிகளை நிராகரிப்போம்.

## ஸ்ரீ நாராயண தேசாய் புதிய தலைவர்

சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கத்தின் (WRI) பத்தொன்பதாவது மநாடு அண்மையில் பின்லாந்தில் உள்ள ஆலண்ட் நகரில் இடம்பெற்றது.

சுமார் நாற்பதுக்கு மேலான நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்குபற்றினர்.

இம்மாநாட்டில், சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கத்தின் இலங்கைக் கிளையாகிய 'அறவழிப் போராட்டக் குழு' வின் சார்பாக செயலாளர் திரு. க ஜீவகதாஸ் பங்குபற்றினார்.

இவ் இயக்கத்தின் புதிய தலைவராக இந்தியாவைச் சார்ந்த ஸ்ரீநாராயண தேசாய் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் வசிக்கும் ஸ்ரீநாரயண தேசாய் இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் இருந்தே அறவழித் துறையில் இயங்கி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மகாத்மா காந்தியின் செயலாளராகப் பணிபுரிந்த ஸ்ரீ மகாதேவதேசாயின் புதல்வரே ஸ்ரீ நாராயணதேசாய் ஆவார்

சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கத்தின் புதிய தலைவருக்கு அறவழி தனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது,

## அறவழி நல்லொழுக்கச் சிறுவர் கழகம்

அறவழிப் போராட்டக்குழுவின் சிறுவர் திட்டமாகிய ''அறவழி நல்லொழுக்கச் சிறுவர்கழக''த்தினையாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களில் அமைத்துச் செயல்படுத்த அறவழிப் போராட்டக்குழு தீர்மானித்துள்ளது.

எமது சமுதாயத்தின் எதிர்கால நற்பிரஜைகளை அன்பு, அறவழி, அமைதி வழிகளில் உருவாக்கிக்கொள்ளும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சிறுவர் கழகங்களின் உறுப்பினர்களுக்கு பயிற்சிகள், கருத்தரங்குகள் மூலம் நற்போதனைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை இயக்குநர் திரு. ஏ. பேரம்பலம் மேற்கொண்டு வருகின்றார்.

## போசாக்கு உணவுத் திட்டம்

அறவழிப் போராட்டக்குழுவினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நடாத்தப்பட்டு வருகின்ற 'அறவழி' பாலர் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற பாலர்களுக்கு போசாக்கு உணவினை வழங்குவதற்குக் குழு ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

கிராமங்களில் போசாக்குப் பற்றுக் குறையினால் வளர்ச்சி குன்றி இருக்கும் பாலர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் நல்ல பயன் கிட்டும் எனக் கருதப்படுகின்றது.

## அறவழி சென்றிடுவோம்!

அன்புடன் வாழ்ந்திடுவோம்
அறந் தன்னைப் பேணிடுவோம்
துன்பத்தைத் துடைத்திடுவோம்
தூய வழி செல்லுவோம்!

★

வஞ்சனை கொடுமையம்மா — நாம்
வாழ்வில் அதை மறப்போம்
தஞ்சமென் றடைவோர்க்கு
தக்கவழி சமைப்போம்
(அன்புடன்)

★

சத்தியம் அகிம்சை கொண்டால்
சஞ்சலம் தீருமம்மா; யேசு
புத்தரும் காந்தியுமே; இவை
போற்றிய பொதுமறையாம்!

★

பகைதனை விட்டொழித்து
பழிதன்னை நீக்கிடுவோம்
வகையான வாழ்வு காண
வறுமையைப் போக்கிடுவோம்!

★

அறவழி சென்றிடுவோம் — நாம்
அகிலத்தை வென்றிடுவோம்
திறமான பணிகள் கொண்டால்
தீங் கொன்றும் இல்லையம்மா!
(அன்புடன்)

இராஜி சண்முகநாதன்

## அறிவுத்திறன் போட்டிகள்

அறவழிப் போராட்டக்குழுவின் கல்விப் புலமைப்பரிசில் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் மாணவ—மாணவியர்களுக்கான அறிவுத்திறன் போட்டிகள் டிசம்பர் மாதம் 28ஆம் திகதி அறவழி பணியகத்தில் இடம்பெற்றன.

இப்போட்டிகளில் 65 மாணவர்கள் பங்குபற்றினர். வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும், பெப்ரவரி 25ஆம் திகதி வழங்கப்படும்.

## ஒலிம்பிக் போட்டியில் குத்துச் சண்டைக்குத் தடை?

நான்கு வருடத்துக்கு ஒரு முறை நடாத்தப்படுகின்ற சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் குத்துச் சண்டைக்குத் தடை விதிக்கப்படவேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றினை 30 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சர்வதேச அமைப்பு ஒன்று ஒலிம்பிக் போட்டி நடத்தும் குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

வன்செயல் நிகழ்வுகளுக்கு இக் குறித்த போட்டியானது ஊக்கமளிப்பதன் காரணமாக, எதிர்காலத்தில் நடாத்தப்படவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் இவ்விளையாட்டை அவசியம் தடைசெய்தல் வேண்டும் என இவ் அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

முப்பது நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பில் அறவழிப் போராட்டக் குழுவும் ஒன்றாகும்.

இச் சர்வதேச அமைப்பின் தூதுக்கோஷ்டி ஒன்று ஒலிம்பிக் போட்டி நிர்வாகிகளை மிக விரைவில் சந்தித்து இவ் விடயம்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

## விதவைகள் மறுவாழ்வுத் திட்டம்

அறவழிப் போராட்டக்குழுவின் விதவைகள் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ், குடாநாட்டில் இருக்கும் சுமார் நூற்றுக் கணக்கான குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம், பாதிக்கப்பட்ட குடும்பங்களில இருக்கின்ற சிறுவர்களின் பெயர்களில் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு, குறிப்பிட்டளவு நிதி வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வேறு சில குடும்பங்களுக்கு கால் நடை வளர்ப்புக்கும், கோழி வளர்ப்புக்கும் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## அறவழி ஒன்றுகூடல்

அறவழி இயக்கத்தில் தொண்டாற்றுபவர்களை உள்ளிட்ட வருடாந்த ஒன்றுகூட நிகழ்ச்சி மார்கழி 31இல் பணியகத்தில் இடம்பெற்றது.

இவ் ஒன்றுகூடல் நிகழ்ச்சியின்போது சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பூ. சுந்தரம் பிள்ளை, இளைப்பாறிய அதிபர் பண்டிதர் செ. சிவலிங்கம், துணை அதிபர் திரு கே.கோபாலகிருஷ்ணன், அதிபர் திரு க இளையதம்பி. ஆசிரியர் ஏ. சோதிலிங்கம், செல்வி கி கிருஷா, அதிபர் திரு. எஸ். சத்திவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்குகொண்டிருந்தனர்.

அன்றைய தினம், காலை நிகழ்ச்சியில், சமாதான சகவாழ்வுக்கான பிரார்த்தனையும்,காந்தியின் உருவச்சிலைக்கு மெழுகுவர்த்திகள் ஏற்றும் நிகழ்ச்சிகளும் விசேடமாக இடம்பெற்றிருந்தன.

அதனைத்தொடர்ந்து பாலர் பாடசாலை ஆசிரியைகளின் கலாச்சார நிகழ்ச்சிகளும், இன்னிசை வேலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

ஒன்றுகூடலின்போது சிறப்பு விருந்தினராகப் பங்குகொண்ட பிரமுகர்கள் அறவழி இயக்கத்தின் பணிகளைப் பாராட்டி ஊக்குவித்ததுடன் புதிய ஆண்டில் மென்மேலும் பல ஆக்கபூர்வமான திட்டங்களைச் செயல்படுத்தவேண்டும் எனவும் ஆசிகூறினர்.

## டென்மார்க் சிறுவரின் முயற்சி

டென்மார்க்கில் இயங்குகின்ற அறவழி ஸ்தாபனமாகிய ஏ. எம்.கே.யில் (A.M.K ) இருக்கின்ற அங்கத்தவர்களின் சிறுவர்கள் இருநூற்றுக்கு மேற்பட்ட அழகிய சித்திரங்களை வரைந்து அறவழி நல்லொழுக்கச் சிறுவர் கழகத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இச்சித்திரங்கள் அறழிப் பணியக்கத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

## நமீபியா சுதந்திர நாடாகிறது

தென் ஆபிரிக்காவின் அடக்குமுறையின்கீழ் சுமார் இருபது ஆண்டுகளுக்குமேலாக இருந்து வருகின்ற நமீபியா நாடு, இவ் வருடம் ஏப்பிரல் முதலாம் திகதி முதல் சுதந்திர நாடாகின்ற வாய்ப்பைப் பெற்றுள்ளது.

சுதந்திரக் காற்றை அனுபவிக்கவுள்ள நமீபியா மக்களுக்கு ''அறவழி'' தனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவித்துக்கொண்டுள்ளது.



# காந்தி பிரசுரங்கள்

காந்தி பிரசுரங்கள் வரிசையில் புதிய சமுதாய வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்டு வருகின்ற பிரசுரங்களுக்கு பொதுமக்கள், பொது ஸ்தாபனங்களிடமிருந்து நல்ல ஆதரவு கிடைத்து வருகின்றது. நல்ல பயன்தரும் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களின் சிந்தனையில் மாற்றத்தையும், மனத்தில் புத்துணர்வையும் ஏற்படுத்த வேண்டும் என்ற எமது பெருநோக்கு வெற்றிபெற்று வருவதைக் காண்கின்ற சமயம் எம் பணியில் இரட்டிப்பு மகிழ்வு தோன்றுகின்றது.

காந்தி பிரசுர வகையில் வெளியிடப்பட்ட ஒன்பதாவது பிரசுரமாகிய ''அன்பின் வலிமை''யை நூற்றுக்கணக்கான பொதுமக்கள், மற்றும் பொது ஸ்தாபனப் பிரதிநிதிகள் நேரில் எமது பணியகத்துக்கு வந்து பெற்றுச் சென்றனர்.

இவ்வகையில் பொது மக்களிடம் இருந்து கிடைக்கின்ற ஆர்வம், ஊக்கம், ஆதரவை எண்ணி நாம் மகிழ்கின்றேம்.

மிகவிசேடமாக வெளிநாடுகளில் வாழ்கின்ற எமது தமிழ் அன்பர்கள் ''அன்பின்வலிமை', பிரசுரங்களை அனுப்புமாறு கோரிக் கடிதங்கள் எழுதிய வண்ணம் உள்ளனர். இம் மாதம்வரை லண்டன், நோர்வே, டென்மார்க், கனடா, சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்சு, மேற்கு ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளுக்கு 500க்கு மேலான பிரசுரங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

எம்பகுதியில், இவ்வகை வெளியீடுகளுக்கு பெற்றேர்களிடமிருந்தும் பெருமளவிலான ஆதரவு எமக்குக்கிடைத்திருக்கின்றது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்வதில் மகிழ்கிறேம்.

''அன்பின் வலிமை'' பிரசுரத்தை நாம் எமது வீடுகளில் பிறேம் போட்டு வைத்துப் பாதுகாத்துள்ளோம்'' என்று தெரிவித்துப் பலர் கடிதமூலம் தெரிவித்திருக்கின்றர்கள் அதன்மூலம் எம்மை, எம் சமுதாயப்பணியை ஆக்க, ஊக்கப்படுத்தியுள்ளனர்.

இவ்வகைப் பிரசுரங்களைத் தொடர்ந்து எம்மிடமிருந்து பெற விரும்பும், பொதுமக்கள், மற்றும் பொது ஸ்தாபனங்கள் தங்கள் பெயர், முகவரிகளை எமக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றேம்,

# திருமதி டயானு மீண்டும் தலைவரானுர்

சர்வதேச தோழமை இணக்க இயக்கத்தின் (IFOR) புதிய தலைவராக இங்கிலாந்தைச்சார்ந்த திருமதி. டயானு பிரான்சிஸ் மீண்டும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவ் இயக்கத்தின் மாநாடு அண்மையில் இத்தாலியில் உள்ள அஸிஸி எனும் வரலாற்று முக்கியத்துவம்பெற்ற நகரில் நடைபெற்றது.

இம் மாநாட்டின்போது சுமார் 45 நாடுகளில் இருந்து, அறவழி, சமாதானத் துறைகளில் பணிபுரியும் 250 க்கு மேற்பட்ட பிரமுகர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

சர்வதேச தோழமை இணக்க இயக்கத்தின் இலங்கைக் கிளையாகப் பணியாற்றி வருகின்ற அறவழிப் போராட்டக் குழுவின் சார்பாக செயவாளர் திரு. க. ஜீவகதாஸ் இம் மாநாட்டில் பங்கு கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

புதிய தலைவராசத் தெரிவாகியுள்ள திருமதி டயானுவுக்கு அறவழி தனது அன்பான ஆசிகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளது.

சர்வதேச தோழமை இணக்க இயக்கமானது பல்லின, பல்மத உறுப்பினர்களைக் கொண்ட ஸ்தாபனமாகும்.

# 130 வருட எல்லைப் பிரச்சனைக்குத் தீர்வு

மத்திய அமெரிக்காவில் இருக்கும் நாடுகளாகியகொண்டோரஸ்ஸூம், எல்சல்வடோரும் 130 வருடங்களுக்குமேலாக தபக்குள் இருந்துவருகின்ற எல்லைப் பிரச்சனைக்கு சகோதரத்துவ முறையில் தீர்வுகாண இணங்கியுள்ளன.

இவ்விருநாடுகளின் வெளிநாட்டமைச்சர்களும், நெதர்லாந்தின் தலைநகரில் அமைந்திருக்கும் சர்வதேச நீதிமன்றத்தில் நேரடியாக பங்கு கொண்டு, நீதிமன்று தீர்க்கும் விதத்தில் தமது எல்லைப் பிரச்சனையை நிரந்தர முடிவுக்குக் கொண்டுவர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவ் எல்லைத் தகராறு காரணமாக இவ் இரு நாடுகளும் 1969இல் ஐந்து நாள் போரில் ஈடுபட்டிருந்ததன் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் இழந்தனர்.

# உலகச் செய்தியில் அறவழி

உலகின் பல்வேறு பகுதியிலும் அண்மையில்இடம்பெற்ற அறவழிப் போராட்டச் செய்திகளை எமது வாசகர்களின் நன்மை கருதி இங்கே வெளியிடுகின்றேம்.

★ தென் ஆபிரிக்கா

தென் ஆபிரிக்காவில் இருக்கும் பல நூற்றுக்கணக்கான வெள்ளைஇன இளைஞர்கள் கட்டாய இராணுவ சேவையில் சேர்வதில்லை எனக் கோரி தமது எதிர்ப்புக்களை அறவழி மூலம் தென் ஆபிரிக்கா அரசுக்குக் காட்டியுள்ளனர். இவ் இளைஞர்கள் பொது இடங்களில் கூடி, கட்டாய இராணுவ சேவைக்கு எதிரான தமது வாக்குமூலங்களில் கையொப்பமிட்டுள்ளனர்.

★ ஹொங்—ஹொங்

ஹொங்—ஹொங்கில் வாழ்கின்ற 3000வியட்நாமியபடகு மக்களால் மேற்கொள்ளப்பட்ட மூன்று நாள் உண்ணுவிரதப் போராட்டம் முடிவடைந்தது. ஹொங்—ஹொங்கில் இருக்கும் வியட்நாமிய படகுமக்களை நாடுகடத்துவது என அந்நாட்டின் அரசு மேற்கொண்ட தீர்மானத்துக்கு எதிராகவே இவ் உண்ணுவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதாகும்.

★ அமெரிக்கா

அமெரிக்க எழுத்தாளர் வட்டத்திஞல் நடாத்தப்பட்ட 22 வார வேலைநிறுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இவ் வேலைநிறுத்தத்தின் காரணமாக அமெரிக்காவில் இருக்கும் லொஸ் ஏஞ்சல், நியோயோர்க் போன்ற நகர்களில் இருக்கும் 9000 க்கு மேலான எழுத்தாளர்களும் பல முக்கிய தொலைக்காட்சி நிறுவனங்களும் பாதிக்கப்பட்டன.

★ பர்மா

பர்மாவில் ஏற்பட்ட தலைமைத்துவ மாற்றத்திற்கு எதிராக ரங்கூன் நகரவீதிகளிலும் மற்றும் முக்கிய நகர வீதிகளிலும் பத்தாயிரத்துக்குமேலான பர்மா மக்கள் தமது எதிர்ப்பை, ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் முலம் வெளிப்படுத்தினர்.

★ செக்கோஸ்லவியா

செக்கோஸ்லவியாவின் தலைநகராகிய பிராக்கில், செக்கோஸ்லவாக்கியர்களால், மேற்கொள்ளப்பட்ட அலெக்ஸாண்டர் டியுபெக் என்ற தலைவனின் விடுதலை கோரி நடாத்திய ஆர்ப்பாட்டத்தின் காரணமாக பிராக் நகர் செயல் இழந்து காணப்பட்டது,

★ ஆர்மேனியா (ருஸ்யா)

ஆர்மேனியாவின் தலைநகராகிய யெரிவனில் ஆர்மேனியர்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு சோவியத் படை தடை விதித்ததை எதிர்த்து, ஆயிரக்கணக்கான ஆர்மேனியர்கள் தமது எதிர்ப்பைக் காட்டினர்.

★ சிலி

சிலி நாட்டின் ஜனதிபதி தனது பதவிக் காலத்தை மேலும் எட்டு வருடங்களுக்கு நீடித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் மத்திய சந்தியாகோநகரில் ஒருலட்சத்துக்கு மேலான சிலி மக்கள் ஒன்றுகூடித் தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

தொகுப்பு : கே ஜே,

# வரதட்சணை ஒரு சமூக அநீதி!

★ பெற்றேரே, உங்கள் பெண்பிள்ளைக்கு நல்ல கல்வியை அளித்து, அவர் தம் சொந்தக் காலில் நிற்கச் செய்யுங்கள்!

★ பதினெட்டு வயதின் பின்பே அவரது திருமணம்பற்றி முடிவெடுங்கள்.

★ வரதட்சணை கொடுப்பதை நிறுத்துங்கள். வரதட்சணை பற்றிப் பேசுவதை நிறுத்துங்கள்.

★ திருமணத்தின்பின், உங்கள் மகள், வரதட்சணை காரணமாகக் கொடுமைப்படுத்தப்படும்போது, அவரைப் பாதுகாக்க முன்வாருங்கள்.

★ இளைஞரே! மகளிரே! வரதட்சணைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் திருமணப் பேச்சுக்களை நிராகரியுங்கள்.

★ நண்பர்களே! உறவினர்களே! வரதட்சணை வாங்கும் அல்லது கொடுக்கும் குடும்பங்களுடன் தொடர்புகளை வையாதீர்கள்.

★ வரதட்சணைக் கொடுமையால் பாதிப்படையும் அயலவர்களுக்கு உதவுங்கள்.

★ சட்டவல்லுனர்களே! வரதட்சணைக் கொடுமைக்கு எதிராகக் குரல் எழுப்புங்கள். வரதட்சணை கோருவோருக்குக் கடும் தண்டனை அளிக்க முயலுங்கள்.

★ சமூகஸ்தாபனங்களே! வரதட்சணைக் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி, உதவுங்கள். சமுதாயத்தில் வரதட்சணைக் கொடுமையை இல்லாதொழிக்கப் பாடுபடுங்கள்.

★ வரதட்சணையானது சமூக அநீதிகளில் ஒன்ருகும், நாம் அனைவரும் இணைந்து போராடிஞல் இவ் அநீதியை வெல்லலாம்!

(இந்தியாவில் நஷனல் கெரால்ட் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரத்தின் தமிழாக்கம்).

# புதிய சமுதாய வெளியீட்டகம்

அறவழிப் போராட்டக்குழுவின் புதியதோர் திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது''புதிய சமுதாய வெளியீட்டகம்''. தமிழ் சமுதாயத்தின் மத்தியில் அறவழி, சமாதானம், மனித உரிமைகள், சமுதாய மாற்றம் போன்ற துறைகளில் தமிழ், ஆங்கில வெளியீடுகளையும் பிரசுரங்களையும், மற்றும் சிறு நூல்களையும் வெளியிடவுள்ளது.

அறவழி, சமாதானம், மனித உரிமைகள், சமுதாயமாற்றத் துறைகளில் நல்ல ஆக்கபூர்வான, ஆரோக்கியமிக்க கருத்துக்களை மக்களின் வளர்ச்சி, முன்னேற்றம் கருதி வெளியீடு செய்வது இதன் முக்கிய பணிகளுள் ஒன்ருகத் திகழும்.

# பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி

பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான பயிற்சிநெறி ஒன்றினை அறவழிப் போராட்டக் குழு தற்போது நடாத்திவருகின்றது.

இப்பயிற்சித் திட்டத்தில் மொத்தமாக அறுபது பாலர் பாடசாலை ஆசிரியைகள் பயின்று வருகின்றனர்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி உதவியுடன் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் இப் பயிற்சிநெறியில் குடாநாட்டின் பல கிராமங்களில் இருந்தும் பயிற்சியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அறவழிப் போராட்டக்குழுவின் கல்வி ஆலோசகரான திரு. கே. கோபாலகிருஷ்ணனின் நெறிப்படுத்தலில் இப் பயிற்சி தொடர்கின்றது.

# கிராமிய இணைப்பாளர் நியமனம்

அறவழி இயக்கத்தின் கிராமிய வளர்ச்சிப் பணிகளை மேலும் தீவிரப்படுத்த உதவும் பொருட்டு ஏழு கிராமிய இணைப்பாளர்கள் அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அறவழிகிராமங்களில் ஏலவே இடம்பெற்று வருகின்ற பணிகளை மேற்பார்வை செய்வதுடன், புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள வேலைத் திட்டங்களுக்கும் இவர்கள் பொறுப்பாக விருப்பர்.

இவர்களுக்கான ஒருநாள் பயிற்சிவகுப்பு அண்மையில் நடாத்தப்பட்டது.

அமரர் க. கந்தசாமி

# நினைவு அலைகள்

— ஜீவகன்

டிசம்பர் 10 மனித உரிமைகள் தினம்! இதனைக் குறிக்கும் வகையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கைக் கிளை கொழும்பில் ஒரு புகைப் படக் காட்சியினை 1981ஆம் ஆண்டில் நடாத்தியது.

இக் கண்காட்சியில் பங்கு கொள்ளும் வண்ணம் எனக்கும் ஓர் அழைப்பு வந்தது

1980—ம் ஆண்டின் துவக்கத்தில் இருந்து இச்சபையின் ஓர் உறுப்பினராக இருந்து வந்துள்ளேன்.

இச்சபையின் இணைச்செயலாளராக திரு. கே. கந்தசாமி பணிபுரிந்து வந்தார். அவர் கையொப்பம் இட்டு அனுப்பும் சுற்றறிக்கைக் கடிதங்களை அடிக்கடி பெற்றுவந்தேன்.

ஆனால்! அந்தப் பெயருக்குரியவரை நான் முன்னர் எப்போதுமே நேரில் சந்தித்துக் கொண்டதில்லை. ஆயினும்! அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன். மனித உரிமைகள் துறையில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டுவரும் ஓர் ஆர்வலர் எனவும், ரீ.ஆர்.ஆர்.ஓ. (T.R.R.O.) எனும் ஸ்தாபனத்தின் முன்னோடி எனவும் நான் அறிந்தேன்.

திரு. கந்தசாமி என்பவரை நேரில் காணவேண்டும் — பேசவேண்டும் என்ற பெரு அவா என்னுள் சதா வளர்ந்து கொண்டேவந்தது.

புகைப்படக் கண்காட்சியில் பங்கு கொள்வது என முடிவு செய்தேன்.

1981 டிசம்பர் 10 என்வாழ்வில் ஒரு முக்கியமான நாளானது.

ஆமாம்! அன்று தான் நான் முதன் முதல் திரு. கந்தசாமியைச் சந்தித்த நாள்!

இச்சந்திப்பும் கூட ஒரு விதத்தில் புதுமையானதே!

கண்காட்சி இடம் பெற்ற ஒரு பெரிய மாடி வீட்டுக்குப் போய்விட்டேன். அங்கே! பல்நூறு பிரமுகர்கள் கூடிநின்றனர். அங்கு போவோரை எல்லாம், வெள்ளை அரைக்கைச் சட்டையும், வெள்ளை லோங்சும் அணிந்து நின்ற ஒரு சிவந்த உருவம், இன்முகம் காட்டி கைலாகு கொடுத்து வரவேற்று உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தது.

அவ் உருவத்துக்கு உரியவரின் புன்சிரிப்பு மறக்க முடியாதது.

எல்லோர் போல என்னையும் Come, Come எனக்கூறி கை குலுக்கி வரவேற்று உள்ளே அனுப்பினர்.

"இவர் யாராக இருக்கக் கூடும்" என்ற வினா என்னுள் எழுந்தது.

சில நிமிடங்களின் பின்னர். மன்னிப்புச்சபையில் பணிசெய்யும் திருமதி. அனே ரணசிங்கா என்பவரைக் கண்டு உரையாடினேன்.

"எமது செயலாளர் திரு. கந்தசாமியைச் சந்தித்தீரா? என அனே கேட்டார்.

"இல்லையே! அவரைக்காணவும் - பேசவும் ஆவலாக இருக்கிறது" என்றேன்.

"நீங்கள் அவரை அவசியம் காணவேண்டும்" எனக்கூறிக் கொண்டே நான் முன்னர் பார்த்த அச் சிவந்த உருவத்திடம் அ ழைத்துச் சென்று என்னை அறிமுகப் படுத்தினர், அனே!

ஒரு தமிழ்மகனுக்கு இன்னுமொரு தமிழ்மகன், வேறு இன நண்பர் மூலம் அறிமுகம் செய்யப்பட்டார்.

எம் இருவருக்கும் இடையில் இருந்த இடைவெளியில் நெருக்கம் காணப்பட்டது.

"தம்பி! எப்ப யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தீர்கள்? எப்படி உங்கள் வேலைகள்?" என முதலில் திரு கந்தசாமி பேச்சை ஆரம்பித்தார்.

திரு. கந்தசாமியுடன சில நிமிடங்கள் உரையாடினேன்.

"அடுத்த தடவை கொழும்புக்கு வரும் போது அவசியம் என் அலுவலகம் வாருங்கள்" என்று கூறினர்.

எனது முதல் சந்திப்பிலேயே அவர் மீது எனக்கு இனம் புரியாத் ஒரு பற்று, பாசம் ஏற்பட்டுக் கொண்டது என்று கூறலாம்.

பின்னர், நான் என் அலுவல்கள் காரணமாக கொழும்பு சென்ற போதெல்லாம் திரு. கந்தசாமியின் அலுவலகம் செல்வதை முக்கிய பணியாகக் கொண்டேன்.

ஒரு பெரிய, பழைய வீட்டில் சிறு பகுதியைத் தனது அலுவலகமாகக் கொண்டிருந்தார்.

அலுவலகம் நவீன வசதிகளைக் கொண்டிருக்கவில்லை பார்க்குமிட மெங்கும், பத்திரிகைகள் புத்தகங்கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள் நிரம்பி இருந்தன.

தொழில் ரீதியாக அவர் ஒரு சட்டத்தரணி! ஆயினும்! சட்டத்தரணி தொழிலில் அவருக்கு அதிகம் நாட்டம் இருக்கவில்லை. ஆனல்! தமிழ் மக்களின் துயர் துடைப்புப் பணியையும் வளர்ச்சிப்பணியுமே அவர் தம் இலட்சியமாகக் கொண்டிருந்தார். அவ்வாறே செயற்பட்டார்.

தம் வாழ்வையும், உடம்பையும் மெழுகுவர்த்திபோல ஆக்கிக் கொண்டு இயங்கினர்.

நீதிமன்றுகளில் அவர் சமூகமாயிருக்கும் நாட்கள் மிக, மிக குறைவாகவே இருந்தது.

சட்டத்தரணி கந்தசாமி நீதிமன்றில் காணப்படுகின்றர் என்றல், அன்று தமிழ் இளைஞர் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல் வழக்கு இடம் பெறவுள்ளது என்பதைப்பலர் அறிந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் மன்னிப்புச்சபையின் கிளை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தார். அது தொடர்பான ஆரம்ப வேலைகளிலும் ஈடுபட்டிருந்தார். இருந்தபோதிலும்! அது நிலையான அமைப்பாக உருப்பெற வாய்ப்பின்றிப் போய்விட்டது.

1977ல் இனக்கலவரத்தால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டிருந்த வேளையில் அமரர் கந்தசாமி ரீ ஆர். ஆர். ஓ. அமைப்பு மூலம் ஆற்றிய துயர் துடைப்புப் பணிகள், மறுவாழ்வுப் பணிகள் அவரின் தூய பணிக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்திருந்தன.

பின்னர் 1983ல் ஏற்பட்ட கொடூரமிக்க இனக்கலவரத்தின் காரணமாக அவர் மனம் தாககமடைந்தது.

தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் அகதிகளாக்கப்பட்டனர். பாதுகாப்புத்தேடி, யாழ்ப்பாணம், சென்னை என அகதிகள் வெளியேறினர்.

இச்சமயத்தில் 'கந்தசாமியும் லண்டனுக்குப் போய்விட்டாராம்' என்ற செய்தி வெளிவந்தது

1977முதல்கொழும்பில் இயங்கிய ரீ. ஆர். ஆர். ஓ. யாழ்நகரில் இயங்க ஆரம்பித்தது.

1983 இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு அபயம் அளிக்கும் வகையில் அறவழி இயக்கம் கைதடியில் ஒரு பெரிய அகதிகள் முகாமை ஆரம்பித்தது.

இதன் காரணமாக அறவழிக்கும் ரீ. ஆர். ஆர். ஓவுக்குமிடையில் நெருக்கம் ஏற்படலாகியது.

ரீ. ஆர். ஆர். ஓ வின் தலைவராக இருந்த அமரர் விசுவலிங்கம் ஐயாவும், செயலாளராக இருந்த நண்பர் சிவசூரியரும் அடிக்கடி கைதடி முகாம வந்து போயினர்.

ஒரு நாள் நண்பர் சிவசூரியர் எனனிடம் வந்து "திரு கந்தசாமி உங்களைப்பற்றி விசாரித்துக் கடிதம் எழுதியுள்ளார்' எனக்கூறி அவரின் முகவரியை என்னிடம் கொடுத்தார்.

'லண்டனில் திரு. கந்தசாமி CBFTRR என்ற பெயரில் ஒரு ஸ்தாபனத்தை இயக்குகிறர்" என நண்பர் சூரி என்னிடம் கூறினர்.

இத்தகவல் என் காதில் இனிய உற்சாகமூட்டுவதாக இருந்தது. கடிதத்தொடர்பை ஏற்படுத்தினேன். அறவழியின் வளர்ச்சியில், செயற்பாட்டில் அமரர் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருந்தார்.

"பாலர் பாடசாலைத் திட்டப் பணியில் நீங்கள் காட்டி வருகின்ற ஆர்வம், ஈடுபாடு முக்கியமானது. மேலும் பல கிராமங்களில் பாடசாலைகளை ஏற்படுத்திச் செயல்படுங்கள் என்று கூறிக்கொண்டார்

அமரர் கந்தசாமியின் ஊக்குவிப்பால், வழிகாட்டலால், வழிநடத்தலால் தமிழ்ப்பகுதிகளில் பலஸ்தாபனங்கள் சேவையின் உச்சிக்குச் சென்றன.

பொது வாழ்வில் திறமை கொண்டவர்களைக் கண்டுவிட்டால், பின்னர் அவரின் பாசப்பிடிப்பில், அவரிடம் இருந்து விலகிக் கொள்வது என்பது இயலாத காரியமாகவே இருந்தது.

1988ம் ஆண்டு மே மாதம் "நான் யாழ்ப்பாணம் வந்துவிட்டேன். என்னை வந்து சந்திக்கவும்" எனக் கடிதம் எழுதினர். சென்றேன். சந்தித்தேன்.

"ஒருநாளைக்கு உங்கள் அலுவலகம் வரவேண்டும் தம்பி" என்றர். நாட்குறிப்பில் பதிந்தும் கொண்டார். வரவை எதிர்பார்த்திருந்தேன். இவ்வேளையில் நான் வெளிநாடு செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். போவதற்கு முன்னர் அவரைக் கண்டு பேசவேண்டும் என அவாப்பட்டேன். ஆனல் வாய்ப்புக்களோ தூரச் சென்றுவிட்டன.

நான் என் பயணத்தில் புறப்பட்டுவிட்டேன். 1988 ஜூன் மாதம் பின்லாந்து சென்று பின் நோர்வே சென்றேன்.

"திரு கந்தசாமி காணமல் போய்விட்டாராமே?" என என் நோர்வே நண்பர்கள் கூறினர். எனக்கோ துக்கம் தாழமுடியவில்லை. "என்ன நடந்திருக்கலாம்?' என யோசித்துக் குழப்பமடைந்தேன். அவருக்காகப் பிரார்த்தித்தேன்.

பின்னர் டென்மார்க் சென்றேன். அங்கும் கூட அவர் பற்றிய துக்கமான செய்தி நிலவியது. "கந்தசாமியைக் காண முடியாது" என்ற தகவல் வந்தது. துக்கம் தாழாது என் இதயம் அழுதது. தனக்காக வாழாது தமிழ் மக்களுக்காக வாழ்ந்தவராயிற்றே, ஆண்டவன் ஏன் இப்படி முடிவை ஏற்படுத்தினர் என நொந்து கொண்டேன்.

அமரர் கந்தசாமி அமரத்துவம் எய்திவிட்டார். அவரால் ஆற்றப்பட்ட, முன்னெடுக்கப்பட்ட பணிகளை யாராலும் முன்னாலும் பின்னலும் செய்ய இயலாது.

அமரர் கந்தசாமி என்றென்றும் தமிழ் நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டிருப்பார்.

## அறநோக்கில்

### நிர்மதியே வேண்டும்

வாழ்க்கையில் மனிதனுக்கு அவனது அடிப்படைத் தேவைகள் எவ்வளவுதான் இருப்பினும்கூட, நிர்மதி என்ற ஒன்று இல்லையேல் அவனது வாழ்வு அர்த்தமற்றதாகிவிடும். நிர்மதியற்ற வாழ்வு மனிதனுக்கு அவசியம்தாஞ? தேவைதாஞ? என்ற கேள்வி தொக்கி நிக்கின்றது.

இன்று தமிழ் மக்கள் நிர்மதியைத் தேடி அலைந்த வண்ணம் வாழ்கின்றர்கள். மக்களின் மனங்கள், பயம், பீதி, துன்பம், துயரம், ஏக்கம் போன்றவற்றினுல் அடைக்கப்பட்ட குழாய்கள் போன்றுள்ளன. நிர்மதி எங்கே? எப்போது? எமக்குக் கிடைக்கும் என்ற பெரு வினு மக்களின் எண்ணங்களிலே சுடர்விட்ட வண்ணம் உள்ளன.

நிர்மதியைத் தேடி மக்கள் அலைகின்றனர். காத்திருக்கின்றனர். ஆனல், நிர்மதியோ மக்களிடம் இருந்து பல காததூரம் போய்விட்டது.

நிர்மதி இன்று கிடைக்கலாம். அல்லது நாளை கிடைக்கலாம். நாளை மறுநாள் கூடக் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை ஒளி மக்களிடையே ஒரு வீதம்கூட காணப்படவில்லை.

"தேடக் கிடைக்காததோ நிர்மதி" என்ற முடிவுடன் மக்கள் தம் வாழ்க்கையை விரும்பியோ அல்லது விரும்பாமலோ ஓட்டிச்செல்கின்றனர்.

நிர்மதி அற்ற வாழ்வும் ஒரு வாழ்வா? என்ற வினவினை சமுதாயத்தின் அடிமட்டத்து மக்கள் முதல் உயர்மட்டம் எனச் சொல்லப்படுகின்ற மக்கள் வரை சதா எழுப்பிய வண்ணமே துயருடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதன் நிமித்தம் சமுதாயத்தில் ஓர் இனம் புரியாத அச்சம் ஏற்பட்டுள்ளது. வாழ்க்கையில் பிடிப்பு, நம்பிக்கை, ஆர்வம் மக்கள் மத்தியில் குறைந்து வருகின்றது. இந்த நிலை சமுதாய வளர்ச்சிக்கு உகந்ததா? அல்லது சிறந்ததா? என்பதைப் பற்றி மிகவும் பொறுப்புணர்வுடன் சிந்திக்க வேண்டும். சிறந்த தொலை நோக்குப் பார்வை கொண்ட முடிவுகளைக் காணவேண்டும்.

பய உணர்வு, அச்ச உணர்வு, நிர்மதியில்லாத நிலை சமுதாய மேம்பாட்டுக்கு அடித்தளமாக அமைய மாட்டாது.

எனவே, சமுதாயத்தின் முன்னேற்றம் கருதி, மக்களிடம் இருந்து விலகிப்போய் விட்ட, போய்க் கொண்டிருக்கும் நிர்மதியை திரும்பவும் ஏற்படுத்தக் கூடிய வகையிலும் அதன் பேருக நிரந்தரமாகக் கிடைக்கக்கூடிய அமைதி, இயல்பு நிலையைத் தோற்றுவிகக வேண்டும்.

நிர்மதியற்ற வாழ்வு கரடுமுரடாகத்தான் காணப்படும். ஆனல், நிர்மதியான வாழ்வோ தெளிந்த நீரோடை போன்றது. தெளிந்த நீரோடையில் தான் சமுதாயத்தின் விம்பத்தை, வளர்ச்சியை, ஒருமைப்பாட்டை ஒருமித்துக் காணக்கூடியதாகவிருக்கும்.

எனவே, இன்று சமுதாயத்தின் சகல தரப்பினராலும் முதலில் வேண்டப்படுவது, விரும்பப்படுவது, எதிர்பார்க்கப்படுவது நிர்மதியைத் தவிர வேறு எதுவுமல்ல.

# அறவழிப் போராட்டம்

அறவழி என்பது சிலரைப் பொறுத்தவரையில் அரசியல் போராட்டத்தில் ஒரு பயன்தரும் கருவியாகும். மற்றும் சிலருக்குத் தமது அரசியல் வாழ்விலும் மேலாக, தமது தனிப்பட்ட வாழ்க்கையின் சகல அம்சங்களையும் தழுவியதானதோர் வாழ்க்கை நெறியாக அறவழி விளங்குகின்றது. அறவழியைச் சிலர் ஒரு தந்திரமிருந்த கருவியாகவோ அல்லது வாழ்க்கை நெறியாகவோ பயன்படுத்துகிறார்கள். எவ்வாறாயினும் அநீதிகளுக்கு எதிராகப் போராடி வெற்றி பெறுவதற்கும், சமாதானத்துக்காக உழைப்பதற்கும் அறவழிப் போராட்ட நேரடி நடவடிக்கைகள் மிகுந்த பயன்தரும் ஒரு முறையாகும் என்பதை உணர்ந்துவரும் மக்கள் தொகை அதிகரித்து வருகின்றது. போர்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும், தேசிய விடுதலைகளை வென்றெடுப்பதற்கும், இன

தமிழ் வடிவம் ஜ. கணேசன்

வெறிக்கெதிரான போராட்டங்களில் வெற்றி பெறவும் அறவழிப் போராட்டம பயன்படுத்தப்பட்டுள்ளது.

"அறவழிப் போராட்ட நேரடி நடவடிக்கைகள்" தொடர்பான பின்வரும சுருக்கமான குறிப்புகள் இத்துறைக்கானதோர் அறிமுகக் குறிப்புகளாகும். இத்துறையில் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்போர் பலருக்கு இவை மிகுந்த பயனுள்ளதாக அமைந்தன. ஐக்கிய அமெரிக்காவில் குடியியல் உரிமைகளுக்காகப் போராடிய டாக்டர் மாட்டின் லூதர் கிங் அவர்களின் வேண்டுகோளுக்கமைய அமெரிக்க FOR ஸ்தாபனம் இக்குறிப்புகளை ஆகக் வெளியிட்டுள்ளது. இவை அமெரிககாவில் நடாத்தப்பட்ட குடியியல் உரிமைப் போராட்டக் களத்தின் பின்னணியில உருவானவை. தற்போதைய இக்குறிப்புகள் சர்வதேச பிரயோகத்திற்கு ஏற்றவாறு சில புதிய மாற்றங்களுடன் விளங்குகின்றன.

## நான்கு அடிப்படைத் தத்துவங்கள்

### 1. போராட்ட இலக்கைத் தெளிவுபடுத்தல்:

அநீதியும், வன்முறையும் எம்மைச் சுற்றி எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. ஒரேயொருமுறை இதற்கெதிராக இயக்கமொன்றினைத் திரட்டிப் போராட்டம் நடாத்துவதால அந்த அநீதிகள், வன்முறைகள் அனைத்தையும் களைந்துவிட முடியாது. ஒரு குறிப்பிட்ட அநீதியில் தம் முழுக்கவனத்தையும் செலுத்திப் போராட்டத்தினை ஆரம்பிக்கவேண்டும். இந்த அநீதி தொடர்பாக மிகவும் எளிமையானதும் தெளிவானதுமான வார்த்தைகளில் கலந்துரையாடுதல் வேண்டும் உங்களது "குறுயகால இலக்கு" என்ன? என்பதைத் தெளிவாகக் கூறுதல் நல்லது. இவ்விதம் தெளிவாகக் கூறுவதால் நேரடிப் போராட்ட நடவடிக்கையின் போது நடைபெறக்கூடிய பேச்சுவார்த்தைகள், தீர்மானம் எடுத்தல் என்பவற்றிற்கு அது உறுதுணையாக இருக்கும். குறுகியகால, நீண்டகால இலக்குகளை எளிதாகவும். தெளிவாகவும் விளங்கவைப்பதற்குச் சில நடவடிக்கைகளில் ஈடுபடலாம். உதாரணமாக இராணுவ தளமொன்றில் ஒரு வாழ்க்கை விருட்சதினை (tree of life) நடுவதனமூலம் இராணுவ விஸ்தரிப்பை எதிர்த்தல் (குறுகிய கால இலக்கு), அணு ஆயுத மற்ற சமாதானப் பிரதேசமாக ஒரு பகுதியை ஆக்குதல் (நீண்டகால இலக்கு) ஆதரித்தல் ஆகியவற்றை மக்களுக்கும் சம்பந்தப்பட்டோருக்கும் தெளிவுபடுத்தலாம்.

### 2. மிக நேர்மையாக இருந்து மற்றவகளின் கருத்துக்களை செவிமடுத்தல்.

உங்களது மாற்றான் உங்களைக் கௌரவிக்கும் நிலையை உருவாக்கி மாற்றானை வெற்றிகொளவது உங்களது இலட்சியத்தின் ஓர் அம்சமாகும். உண்மையையும், நேர்மையையும், நீதியையும மிகவும் உயர்ந்த லட்சியப் பற்றுடன் நீங்கள் கடைப்பிடிக்கின்றீர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுங்கள். அதன்மூலம் மாற்றார் உங்கள்மீது காட்டும் கௌரவத்தையும், கண்ணியத்தையும அதிகரிக்கச் செய்யுங்கள். அறவழிப் போராட்ட நேரடி நடவடிக்கையில் ஓர் அம்சம் மிகவும் முக்கியமானது. நாம் தீர்வுகாணபதற்காக நடவடிக்கையில ஈடுபட்டுள்ள பிரச்சனை தொடர்பானபூரணமான உண்மைத் தன்மைகளை யாரும் சரியாக இதுவரை அறிந்திருக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுதலே அப்பிரதான அம்சமாகும். இப்பிரச்சனை தொடர்பான "பூரணமான உண்மைகளை"த் தேடி அறியும் உங்கள் பணியில் உங்கள் அறவழி இயக்கப் போராட்ட நடவடிக்கை தொடர்பாக மாற்றான் கூறும் கருத்து என்ன என்பதைத் திறந்த மனத்துடன் செவிமடுத்தல் மிகவும் பிரதானமானதாகும்.

### 3. மாற்றானையும் நேசிக்கக் கற்றுக்கொள்ளல்

உங்கள் மாற்றான் எவ்வளவுதான் அநீதியான வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருந்த போதிலும உங்கள் இலக்கு அந்த அநீதிகளையும், வன்முறைகளையும உடைத்தெறிந்து களைந்து விடுதலேயன்றி தவறு செய்ததற்காக அவர்களைத் தண்டிக்கும் நோக்கம் உங்களுக்கு இருக்ககூடாது. வன்முறை, ஒடுக்குமுறை அமைப்புகளைப பேணுவதற்கு மக்கள மறுக்கும் வேளையில்தான் உண்மையான் நீதி நிலைநாட்டப்படும். அதை விடுத்து வன்முறையில் ஈடுபடும் மக்களை அழித்தொழிப்பதன் மூலம் உண்மையான நீதி நிலைபெறச் செய்ய முடியாது. ஒரு குறிப்பிட்ட சில குழுவினர் மட்டுமே அநீதியின் பிறப்பிடமாக விளங்குவதாக எண்ணி நாம் அவர்கள்மீது மட்டும் எமது கவனத்தைத் திருப்புதல் மனித உயிர்கள்மீது நாம் கொண்டுள்ள மதிப்பினைக் கெடுக்க ஏதுவாகும். அத்துடன் அநீதியினை உருவாக்கும் உண்மையான அடித்தள அமைப்புக்களை இனங்காணாமல் ஒதுக்கி விடவும் கூடும். மக்கள் யாவரையும் நாம் ஒரேமாதிரி கௌரவிக்கவேண்டும். சிலர் செய்யும் தகாத செயலை மட்டும் அகௌரவமானது என்று கண்டித்தல் வேண்டும். மக்களைக் கௌரவிப்பதனையும், தகாத செயலை மட்டும் அகௌரவம் என்று கண்டிப்பதனையும் இரு வெவ்வேறான விடயங்களாகப் பிரித்து நோக்கும் சிந்தனைத் திறனும், அதற்கான விசுவாசமும், உறுதியும் அறவழிப்போராட்டத்தில் மிகவும் இன்றியமையாதன. ஓர் எடுத்துக்காட்டாகப் பின்வரும் சந்தர்ப்பத்தைப் பார்க்கலாம்.

"அணுசக்தி மின்நிலையங்கள் அமைந்துள்ள இடங்களிலும், நீர்மூழ்கிக்கப்பல் தளங்களிலும் அறவழிப் போராட்ட நேரடி நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு நடைபெற்றன. அப்போது அங்கு பணிபுரியும் தொழிலாளரும், அப்பகுதியில் வாழும் மக்களும் எவ்வித தீங்குகளால் பாதிப்படைகிறார்கள் என்று தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டது. இங்கு பணி புரிவோரையோ அல்லது நடவடிக்கைகளைக் கண்காணிக்க வந்த பொலிசார், மற்றும் சட்டத்தையும்—ஒழுங்கையும் பராமரிக்க வந்தோரையும் கண்டிப்பதையோ, கேலிசெய்வதையோ, அவமதிப்பதையோ அறவழிப் போராட்டக் குழுவினர் தவிர்த்துக்கொண்டனர்.

மேலும் அவர்கள் தாம் ஒரு கௌரவமான நிலையில் இருந்து அவர்களுடன் பேசியுள்ளார்கள். அணுசக்தி மின்நிலையங்களை நிறுவுதலுக்கும், பேரழிவினை உண்டுபண்ணக்கூடிய ஆயுதங்களைக் கிடங்குகளில் சேமித்து வைத்தலையும் தாம் ஆட்சேபிப்பதற்கான தமது காரணங்களை மிக நேர்மையுடனும், நேரடியாகவும் வெளிப்படுத்தினார்கள்.

### 4. மாற்றான் தன் கருத்துக்களைக் கூறவும் தீர்வு காண்பதில் ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கல்.

நீங்கள் அறவழியினைப் பிரயோகிக்கும்போது அநீதியினை வெற்றி கொள்ளும் உங்கள் வலிமையை வெளிக்காட்டுகிறீர்கள். எனவே உங்கள் மாற்றானுடன் விட்டுக்கொடுக்கும் தன்மையுடன் பேசுங்கள். நான் சொல்வது மட்டுமே சரி என்னும் தற்புகழ்ச்சியைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மாற்றானின் பலவீனங்களை, கடங்கள், அச்சங்கள் என்ன என்பதைக் கண்டுணருங்கள். ஒரு குறித்த விடயத்தில் மாற்றானை எதிர்கொள்ளும் போதிலும் அல்லது மிகப்பெரியதோர் அறவழி இயக்கப் போராட்டத்திலும்கூட, மாற்றான் கலந்துகொண்டு ஒரு தீர்வுக்காக அவனும் உழைப்பதற்கு வழி சமைத்தல் வேண்டும். பேச்சுவார்த்தை நடாத்தக் கூடிய விதமான கோரிக்கைகளை முன்வைத்து அவற்றிற்கு உங்கள் மாற்றான் திட்டங்களைப் பதிலாகத் தருவதற்கு சம்மதங் கொடுங்கள். தாம் தோல்வியடைந்து விட்டோம் என்ற எண்ணம் மாற்றானுக்கு வராமல் உங்களுக்காக அவர்கள் விட்டுக்கொடுப்பதை இலகுவாக்குங்கள்.

## கல்வியின் நோக்கம்

"வழக்கறிஞர்களையோ, சிப்பாய்களையோ, குமாஸ்தாக்களையோ, ஆசிரியர்களையோ, கலைஞர்களையோ உருவாக்குவது கல்வியின் நோக்கமல்ல. மனிதனை உருவாக்குவதே அதன் கம்.

— ஸர் ஜோன்லட்லாகி

# வினோபாவே!

காந்தியடிகளின் தெரிந்தெடுக்கப்பெற்ற சீடர் ஆச்சார்யா வினோபா பாவே. காந்தியடிகள் அவரைத்தான் 1941ல் முதல் தனி நபர் சத்தியாக்கிரகியாகக் குறிப்பிட்டார். வினோபா மகாத்மாவின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றி விட்டார். கிராம இந்தியாவில் நிலத் தொடர்புகளை மாற்ற காந்திய முறையில் மக்கள் இயக்கத்தை நடத்திய ஒரே மனிதர் வினோபா பாவே.

காந்தியடிகள் சொத்தின் உடைமையின்மை பற்றிய அவருடைய நம்பிக்கையைப் பிரகடனப்படுத்திய போதிலும் அவரைப் பொறுத்தவரை தனது வாழ்க்கையில் அதனைச் செயல் படுத்திய போதிலும் தொழில் சொத்துடைமையில் கூட தனியார் சொத்துடமைக் கொள்கையை எதிர்த்துப் போராடவில்லை. ஆனால் சமுதாயம் சொத்துடைமையாளர்களை தர்மகர்த்தாக்களாக பொது நோக்கில் செயல்பட்ச் செய்யுமென்றே நம்பினார்.

வினோபா பாவேதான் துணிச்சலோடு நிலத்தில் தனியார் சொத்துடைமைக் கொள்கையை ஒழிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். எல்லா நிலமும் இறைவனுக்குச் சொந்தம், என்று தொடர்ந்து குரல் கொடுத்தார். இந்தியாவின் மரபுகள், ஆன்மீகம், சமயம் ஆகியவற்றின் பெயரால் காந்திய தர்மகர்த்தா கொள்கையை கிராம அடிப்படையில் பொதுவாக வைத்திருக்கின்ற சொத்தை உருவாக்குகின்ற கருவியாகப் பயன்படுத்தினர். சுமார் ஐந்து மில்லியன் ஏக்கர் நிலத்தை பூமி தானமாகப் பெற்றதில் குறிப்பிடத்தக்க வெற்றி கண்டார். ஆனால் அவர் தனக்குத்தானே குறியீடாக வைத்துக்கொண்ட 50 மில்லியன் ஏக்கரைவிட இது குறைவானதாகும்.

எப்படியிருந்தாலும் அவரது பெரிய தனிமனிதப் போராட்டம் குறுகிய காலத்திற்காவது நாட்டையே ஒரு குலுக்கு குலுக்கியதென்பதை மறுக்க முடியாது. இந்திய சமுதாயத்தின் மிகவும் உணர்ச்சி பூர்வமான வேளாண்மை நிலம் பற்றிய தனியுடமைக் கருத்தில் ஒரு விரிசலை வினோபா ஏற்படுத்தி விட்டார் என்றும் கூறலாம். இந்த வகையில் அவருடைய பூதான இயக்கம் பின்னால் நிலத்திலும் சொத்துத் தொடர்புகளிலும் ஏற்படக் கூடிய புரட்சிகரமான மாறுதலுக்கு நாட்டைத் தயாரிப்பதில் கல்விப்பணியாக அமைந்திருந்தது.

முதலில் தெலிங்கானாவிலும் பின்பு இந்தியாவின் மற்றைய பகுதிகளிலும் கிடைத்த வெற்றியின் விளைவாக சந்தேகமில்லாமல் பொதுவுடமைவாதிகளின் முற்றுரிமை நிலையும் அவர்கள் பலாத்காரமாக உடைமையாளர்களை ஒழித்துக்கட்ட மேற்கொண்ட முயற்சிகளும் உடைப்பட்டனவென்று கூறலாம். பூமி தான இயக்கம் இந்திய வேளாண்மைத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியின் தொடக்கமாக அமைந்தது.

பூமி தானம் வெற்றி பெற்ற அளவிற்கு நாட்டுப்புறத்தில் அறவழியின் மூலமாகவும், தியாகத்தின் மூலமாகவும் சமதர்மத்தைக் கொண்டு வரக்கூடிய வாய்ப்புக்கள் பெருகின.

அமைப்பு முறையில் இருந்த குறைகளும் பின் செய்ய வேண்டிய பணிகளை மேற்கொள்ளாமையும் சமதர்மத்தில் நம்பிக்கையிருப்பதாக கூறிக்கொண்ட போதிலும் நேரு அரசு பூதான இயக்கம் தோற்றுவித்த சூழ்நிலைகளைப் பயன் படுத்திக் கொள்ள முடியாமல் போனதும் இந்த இயக்கம் தொடக்கத்தில் தோற்றுவித்த தூண்டுதல்கள் கருகி விடக் காரணமாக இருந்தன என்பது உண்மையே.

இந்தத் தோல்விகள்தான் நாட்டுப்புறங்களில் வன்முறை தலைதூக்கவும் நக்சல பாரி இயக்கம் தோன்றவும் செய்து விட்டன என்பதும் உண்மையே,

அதே நேரத்தில் சருவியின் மூலம் அற ஆன்மீக ஆற்றலின் துணையோடு நாட்டின் தனியார் சொத்து என்னும் அமைப்பின் அடித்தளத்தில் வினோபா பாவே கொடுத்த அடி இந்திய சமதர்மத்திற்கு அளித்த முக்கியமான கொடையாகும். இதில் இருக்கின்ற மென்மையும் அழுத்தத்தையும் மேற்கத்திய சமதர்மத்தில் காண இயலாது.

# பாவிகளே! பிரார்த்தியுங்கள்!

-கவிஞர் கண்ணதாசன்

எங்கள் இறைவா !
மூல முதல்வனே !

அகல் விளக்குகள் ஒளிவிடும் உன் சந்நிதியில் நாங்கள் மண்டியிடுகிறோம்.

தாழ்ந்து கிடந்த எங்கள் கரங்கள் மேலெழுகின்றன. இரு கை கூப்பி வணங்குகிறோம்.

கூப்பிய கரங்களுக்குள் எந்த ஆயுதமும் மறைத்து வைக்கப்படவில்லை.

சலனமற்ற கண்களையும், சபலமற்ற உள்ளத்தையும் எங்களுக்குக் கொடு.

கடந்த காலங்களில் நாங்கள் செய்த தவறுகளை மன்னித்துவிடு.

சூன்யத்தில் பிறந்த இதயம் வளர வளரக் காட்சிக்கு வருவது நியதி. ஆனால் எங்கள் இதயம் வளரவில்லை.

அது வளர்ச்சிக்குப் பிறகும் சூன்யமாகவே இருந்தது.

கைக்கோலை நழுவவிட்ட குருடன் கருந்தேளைப் பிடிப்பது போல் ஆன்மீக உணர்ச்சியை மறந்துவிட்ட நாங்கள் பாபத்தில் சிக்கினோம்.

அறிந்தோ, அறியாமலோ செய்த எங்கள் குற்றங்களை ஆதி நாயகனே மன்னித்துவிடு

நாங்கள் அமுதென்று எண்ணி நஞ்சை அருந்தினோம். மலர் என்று எண்ணி முட்களைச் சூடினோம்.

எங்கள் கடிவாளம் ஆசையின் கையிலிருந்ததால் எங்கள் பயணத்தையும் ஆன்மா நடத்த முடியவில்லை.

ஆசை அழைத்த வழிசென்றோம். தண்டனை கிடைத்த பிறகுதான் தவறுகளை உணர்ந்தோம்.

மலத்திலே கால் வைத்த போது அது மலமென்று எங்களுக்குத் தெரியவில்லை.

கையினால் தொட்டுப்பார்த்த போதும் கண்டுகொள்ள முடியவில்லை.

மூன்றாவது மூக்கிலே வைத்த போதுதான் முழுதும் புரிந்தது.

இவை ஒரு முட்டாள் செய்யும் காரியங்களே தவிர அக்கிரமக்காரன் செய்யும் காரியங்களல்ல.

நாங்கள் நடந்துசென்ற இருட்காட்டில் எங்கள் அறிவுச்சுடர் எரியவில்லை.

காற்றை மட்டுமே நம்பிப் போகும் பாய்மரப்படகுபோல் ஆசையை மட்டுமே நம்பி எங்கள் வாழ்க்கைப்படகு போய்விட்டது.

நிலைக்கும் என்று நாங்கள் எண்ணியவையெல்லாம் நிலையாதனவென்று இப்போது அறிந்தோம்.

மரத்தில் இருந்து உதிர்ந்து விழுந்த சருகுகள், பசுமை இலைகளைப் பார்த்து ஏங்குவது போல், பாவிகளாகிய நாங்கள் உத்தமமான ஞானிகளைப் பார்த்து அப்படியே நாமும் வாழக்கூடாதா என்று ஏங்குகின்றோம்.

அந்த வாழ்க்கையை ஏ ஹரிஹரனே எங்களுக்கு அருள்வாயாக.

சமைக்கப்பட்ட சேவல் கூவ முடியாதென்பது எங்களுக்குத் தெரியும்.

முழுக்கத் தன்னை அழித்துக் கொண்டுவிட்ட மனிதன் உன்னை வேண்டமுடியாது என்பதும் எங்களுக்குத் தெரியும்.

கண்ணென்பது நல்லவற்றைக் காணுவதற்காகவும், செவி என்பது நன்மொழிகளைக் கேட்பதற்காகவும், நாசி என்பது நறுமணங்களை நுகர்வதற்காகவும், வாய் என்பது நல்ல சேதிகளைச் சொல்வதற்காகவும், கை என்பது உதவி பெறத் தகுதியுள்ளவர்களுக்கு உதவுதற்காகவும், கால் என்பது நல்லோரை நோக்கி நடப்பதற்காகவும் என்பதை நாங்கள் அறியாமற்போனோம்

இந்த அங்கங்களில் ஒன்று அறியாமல் பிழை செய்திருந்தால் ஏ ஆனந்த மூர்த்தியே அந்த அங்கங்களைத் தண்டிக்காமல் விட்டுவிடு.

'தீர்க்கப்படமுடியாத நோய்களெல்லாம் தெய்வத்தின் கட்டளை என்ற இந்துக்களின் மூதுரை எங்களுக்குப் புரிகிறது.

தீர்க்கமுடியாத நோய் எங்களுக்குவராதவாறு திருத்தாண்ட மூர்த்தியே எங்களுக்கு அருள்செய் !

மீன் பூச்சியைத் தின்பது பசியால்; அந்த மீனை நாரை கொத்துவது பசியால் ; அந்த நாரையை மனிதன் கொல்லுவது பசியால்; அந்த மனிதன் தவறுகள் செய்வது பசியால் ;

எங்கள் தவறுகளுக்குப் பசி மட்டுமே காரணமாக இருந்தால் உடனடியாக மன்னித்துவிடு.

அந்த ஆசைக்கு அறியாமையே காரணம் என்றால், அந்த அறிவை நாங்கள் அடையாதவாறு தடுத்தது நீதான் என்பதால் நாங்கள் நிம்மதியாக வாழ உடனே அனுமதித்துவிடு.

# சர்வதேச சிறுவர் உச்சி மகாநாடு

முதலாவது சர்வதேசச் சிறுவரின் உச்சி மாநாடு அண்மையில் நியூயோர்க் நகரில் இடம்பெற்றது. இம் மாநாட்டின்போது ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறுகின்ற நாடுகளில் இருந்து எட்டு வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

''எமது உலகை நல்லதோர் உலகாக ஆக்குவதற்கு என்ன செய்யலாம்'' என்ற தலைப்பில் இச்சிறுவர்கள் கூடி ஆராய்ந்ததுடன், ஐக்கியநாடு சபைக் கட்டிடத்திற்கு அருகில் மரக்கன்றுகளை நாட்டி, ஆடியும், பாடியும் மகிழ்ந்தனர்.

அத்துடன், ''உலகில் போர் இல்லையேல் எம் உலகு எவ்வாறு இருக்கும்'' என்றதலைப்பில் ஒவ்வொரு பங்குபற்றுனரும் ஒவ்வொரு புத்தகத்தினைத் தயாரித்தமை இவ் உச்சி மாநாட்டின் சிறப்பம்சமாகக் கருதப்பட்டது.

இச்சிறுவர் உச்சி மாநாட்டின்போது சிறுவர்களால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில், ''மக்கள் புரிந்துணர்வு அடிப்படையில் ஒவ்வொருவரையும் விளங்கிக் கொள்கின்ற நிலை ஏற்பட்டால் மக்கள் மத்தியில் நிலவுகின்ற பிரச்சனைகள், முரண்பாடுகளுக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகள் காணப்படலாம். அதன் மூலம் மனிதனை-மனிதன் வன்முறை ஆயுதங்கள் கொண்டு கொல்கின்ற நிலைக்கு அவசியமே இருக்காது'' எனச் சுட்டிகாட்டியுள்ளனர்.

# "வித்தி" காலமானார்

யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், தலைசிறந்த கல்விமானுமாகிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் மாரடைப்பால் காலமாகிவிட்டார் என்ற துயரச் செய்தியை அறவழி மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

அறவழி இயக்கத்தின் சில நிகழ்ச்சிகளில் பேராசிரியர் வித்தியானந்தன் கடந்த காலத்தில் பங்கு கொண்டு சிறப்பித்திருந்தார்.

1988 டிசம்பர் மாதம் அறவழி நூலகத்திற்கு 200 தமிழ் ஆங்கில நூல்களை அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

# "மிஸ்டர் காந்தி"

1919ம் ஆண்டு காந்தியடிகள் சென்னைக்கு வந்திருந்த சமயம் பாரதியார் அவரை சந்தித்தார். ஒரு நாள் பகல் இரண்டு மணியளவில் காந்தியடிகள் ஒரு கட்டிலில் சாய்ந்த வண்ணம் தம் செயலாளர் மகாதேவதேசாயடம் ஏதோ சொல்லிக் கொண்டு இருந்தார். அவ்வமயம் அங்கு ராஜாஜீ, சத்தியமூர்த்தி மற்றும் பலர் நின்றுகொண்டிருந்தனர். அறையின் வாயில் காப்போனாக வ. ரா. நின்றுகொண்டிருந்தார். யாரையும் உள்ளே விடவேண்டாம் என்று கண்டிப்பான உத்தரவு. அச்சமயம் பாரதி அங்கு வந்தார். வ. ரா. அங்கு நிற்பதைக்கண்டு 'என்ன ஓய்' என்று சொல்லிக்கொண்டு அறைக்குள் எவருடைய அனுமதிக்கும் காத்திராமல் நுழைந்துவிட்டார்.

பாரதியார், நேரே காந்தியடிகளை வணங்கிவிட்டு அவர் பக்கத்தில் உட்கார்ந்து ''மிஸ்டர் காந்தி'' இன்று மாலை ஐந்தரை மணியளவில் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு கூட்டத்தில் பேசப்போகின்றேன், அக்கூட்டத்திற்கு தாங்கள் தலைமை வகிக்க முடியுமா?'' என்று கேட்டார்.

அன்று மாலை காந்தியடிகளுக்கு வேறு ஒரு அலுவல் இருந்தது. ஆகவே ''இன்று வர இயலாது, தங்கள் கூட்டத்தை நாளைக்கு ஒத்திப்போட முடியுமா?'' என்றார் அடிகள்.

''முடியாது, நான் போய்வருகிறேன், மிஸ்டர் காந்தி தாங்கள் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்தை நான் ஆசீர்வதிக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு பாரதியார் வெளியே போய்விட்டார்.

இதிலுள்ள வியப்பு என்னவெனில் பாரதியார் தம்மை யார் என்று அறிமுகப்படுத்தவில்லை, காந்தியடிகளும் அவரை யார் என்று விசாரிக்கவில்லை. இத்தனையும் ஒன்றிரண்டு நிமிடங்களில் முடிந்துவிட்டன.

பாரதியார்போனதும் காந்தியடிகள் 'இவர் யார்' என்று கேட்டார். அங்கிருந்த ராஜாஜீ 'இவர் எங்கள் தமிழ் நாட்டு தேசியகவி' என்று கூறினார்.

இதைக்கேட்ட காந்தியடிகள் வியந்து 'இவரைப் பத்திரமாய் பாதுகாக்க வேண்டும் இதற்கு தமிழ் நாட்டில் எவரும் இல்லையா?' என்றாராம்.

இதிலிருந்து நாம் அறியக்கிடப்பவை அநேகம். ராஜாஜீ முதற்கொண்டு பயபக்தியுடன் நின்றுகொண்டிருக்க பாரதியார் காந்தியடிகளுடன் சரிசமமாக உட்கார்ந்ததன் மூலம் அவருடைய அப்பழுக்கற்ற கள்ளம் கபடமில்லாத மேதாவிலாசம் பளிச்சிடுகிறது' மற்றொன்று மகாத்மா ஆனபின்னர் காந்தியடிகளைப் பார்த்து ''மிஸ்டர் காந்தி'' என்று அழைத்த தமிழர் அநேகமாக பாரதியாராகத்தான் இருக்க முடியும் இதிலும் அவரின் வெள்ளை உள்ளம் பளிச்சிடுகிறது. மேலும் காந்தியடிகள் மேற்கொள்ளவிருந்த இயக்கத்துக்கு அவர் ஆசீர்வாதம் செய்தது பிரமாதம். அக்காலத்தில் பித்த சந்நியாசியைப்போல் தோன்றிய பாரதியாரையும் அவருடைய மேதாவிலாசத்தையும், வெள்ளை உள்ளத்தையும் நொடிப்பொழுதில் புரிந்து கொண்ட காந்தியடிகள் ''இந்த மேதையைக் காப்பது உங்கள் கடமை'' என்று ஒரே வாக்கியத்தில் தமிழ் நாட்டின் கடமையை நினைவுபடுத்தியது அதைவிடப் பிரமாதம். இனம் இனத்தோடு சேரும் என்பது நிரூபணமாயிற்று.

இந்தியத்தலைவர்களில் காந்தியின் பெருமையை உணர்ந்த வெகு சிலருள் பாரதியாரும் ஒருவர். அவருடைய 'வாழ்க நீ எம்மான்'' என்ற ஒரே பாடலில் காந்தியின் அவதாரத்தையும் பாரதியின் தீர்க்க தரிசனத்தையும் பார்த்து மகிழலாம்.

# அறவழி பாலர் பாடசாலை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருக்கக்கூடிய பின்தங்கிய கிராமங்களில் அறவழி பாலர் பாடசாலைகளை நடத்த விரும்புவோர் அவ்வவ் கிராமிய பொது நிறுவனங்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு 25-02-1989 க்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

செயலாளர்
**அறவழிப் பேராட்டக்குழு**
த. பெ. இல: 2
சாவகச்சேரி

# அன்பு

வாழ்வை இனியதாக்குவது அன்பு. கஷ்டங்களையெல்லாம் மீளச் செய்வது அன்பு. குடும்ப வாழ்க்கையை மேன்மைப்படுத்துவது அன்பு. உலக வாழ்க்கையை சுவைக்கச் செய்வது அன்பு. அழகு அற்றதற்கு அழகு ஊட்டுவது அன்பு.
அன்பு பொலியுமிடம் சுவர்க்கம்
அன்பு மறைந்தவிடம் நரகம்
மனமே நீ அன்பில் ஊறி வளர்க.

# மார்டின் லூதர் கிங்

மார்டின் லூதர் கிங் காந்தியடிகளைச் சந்தித்ததே இல்லை. 1950-ல் அவர் வாஷிங்டனில் டாக்டர் மோர்டேக்கை ஜான்சன் காந்தியடிகளைப்பற்றி நிகழ்த்திய சொற்பொழிவைக் கேட்டபோது அவர் சமுதாய மாற்றத்திற்கான கருவியான அகிம்சையின் வாய்ப்புக்களைத் திடீரென்று அறிந்துகொண்டார். குறிப்பாக அவருடைய சொந்தநாட்டில் வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகள் தினசரி சித்திரவதையாக இருந்த சிக்கலுக்கு காந்திய முறை தீர்வாக இருக்குமென்று கண்டுகொண்டனர்.

அவருக்கு சமுதாய எதிர்ப்பாகவும், சமுதாய மாற்றத்தைக் கொண்டுவரும் கருவியாகவும் காந்தியத்தைப் பின்பற்றும் மிகப்பெரிய வாய்ப்பு முதன்முதலில் 1955 டிசம்பரில் மான்ட் கோமாரி மாவட்டத்தில் வந்தது. மான்ட் கோமாரி பஸ்சேவை நிறுவனம் பல ஆண்டுகளாக அதனுடைய பிரயாணிகளிடம் நிற ஒதுக்கலைப் பின்பற்றி வந்தது. 1955 டிசம்பர் முதல்நாள் திருமதி ரோசாபார்க் வெள்ளையர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களுக்கு அடுத்த வரிசையில் உள்ள முதல் இடத்தில் உட்கார்ந்திருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு வெள்ளைக்காரப் பயணிகளுக்கு இடம் தருவதற்காக அவரை மேலும் பின்னால் தள்ளிப்போகும்படி ஆணையிட்டார்கள். அவர் அப்படிச் செல்ல மறுக்கவே, அவரைக் கைது செய்தார்கள்.

நீக்ரோ சமுதாயம் பட்ட நிற ஒதுக்கல் இழிவுபடுத்துதல் ஆகிய பெருந் துன்பச் சுமையில் ஏற்றிய இறுதிப் பாரமாக இந்நிகழ்ச்சி அமைந்துவிட்டது. பஸ் சேவையைப் புறக்கணிக்க வேண்டுமென்று அந்தச் சமுதாயம் தானே தீர்மானித்துச் செயல்பட இந்நிகழ்ச்சி காரணமாகியது. டாக்டர் கிங்கைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவரும் அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். அந்நேரத்திலிருந்து அவர் பெருமளவிலான ஒத்துழையாமை இயக்கத்தை உருவாக்கினர்.

அந்த இயக்கம் தானே செயல்பட்டது. முதல் நாளில் நூற்றுக்கு நூறு வெற்றியாக அமைந்தது. தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தைச் செயல்படுத்த மாற்றுப்போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டி இருந்தது. இதில் பெரிய நிர்வாகச் சிக்கல்கள் தோன்றின. இருந்தாலும் அவற்றை எல்லாம் திறமையான முறையில் வியக்கத்தக்க வகையில் தீர்த்தனர்.

எப்படியிருந்தாலும் எதிர்ப்பிற்கான உள்வலியை உருவாக்குவதும், அகிம்சையின் கட்டுப்பாட்டிற்குள் அதனை உச்சநிலையில் கட்டிக் காப்பதும் மிகவும் முக்கியமானதாக இருந்தது. மக்களை ஆக்சபூர்வமாகச் செயல்படுமளவிற்குத் தீவிரமாகத் தூண்டுவதும் அதேநேரத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்பைக் கட்டுப்பாட்டிற்குள்ளும் கிறிஸ்தவ எல்லைக்குள்ளும் எப்படி வைத்திருப்பது என்பதுதான் மார்டின் லூதர்கிங்கிற்குப் பெரும் சிக்கலாயிருந்தது.

நாட்கள் செல்லச் செல்ல மகாத்மாகாந்தியின் தூண்டுதலின் செல்வாக்கினை உணரத் தொடங்கினர். நீக்ரோவின் சுதந்திரப் போராட்டத்தில் கிறிஸ்துவின் அன்புக் கொள்கை காந்திய முறையில் செயல்படுவதுதான் நீக்ரோக்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆற்றல்மிக்க கருவியாக இருக்குமென்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கிங்குக்கு வந்துவிட்டது. விரைவாகவே மகாத்மா காந்தியின் பெயர் மான்ட்கோமாரி எங்கும் தெரிந்துவிட்டது. நகரின் பல்வேறு நீக்ரோ தேவாலயங்களிலும் நடைபெற்ற முறையான பொதுக் கூட்டங்களில் அகிம்சைத் தத்துவத்தைப் பரப்பினர்.

மான்ட்கோமாரி நீக்கிரோக்கள் மிகுந்த உற்சாகத்தோடு இந்தத் தத்துவத்திற்குச் செவிசாய்த்தார்கள். இந்த இயக்கம் துன்பமும் தொல்லையுமான காலங்களையும் கோபமூட்டப்பெற்ற நம்பிக்கையற்ற நேரங்களையும் கண்டபோதிலும் காந்திய உணர்வு பெற்ற கிங்கின் தலைமை தோன்றி சூழ்நிலைகளுக்கேற்ப சிக்கல்களைத் தீர்த்து இயக்கத்தை வெற்றியை நோக்கி அழைத்துச்சென்றது.

இயக்கம் அகிம்சைக்கு வெற்றியாக முடிந்தது. இன்று மான்ட்கோமாரியில் இருக்கின்ற பஸ்முறையில் நீக்கிரோக்களும் வெள்ளையர்களும் ஒரே ஆசனத்துல் அருகருகே அமர்கின்ற நிலை வந்துவிட்டது. நிறவெறிக்கு எதிராகச் சகோதரத்துவத்தை நோக்கி முன்னேறும் வகையில் ஓர் எட்டு எடுத்துவைத்துள்ளனர்.

## இலவச மருத்துவ சேவை

அறவழி கிராமங்களில் இலவச மருத்துவ சேவையை யாழ். ஹோலி குரொஸ் வைத்திய சேவை இயக்கம் வழங்கி வருகின்றது. இதன்மூலம் வளர்ச்சி குன்றிய கிராமியமக்கள் நல்ல பயனைப்பெற்று வருகின்றனர்.

இவ்வைத்திய சேவை இயக்கத்தின் பிரதம வைத்திய அதிகாரியான டாக்டர் கே. சுகுமார் அவர்கள் கிராமிய மக்களுக்கு சுகாதார வாழ்வின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துக் கூறிவருகின்றார்.

ஹோலிகுரொஸ் வைத்திய சேவை இயக்கம் கிராமங்களில் நடாத்தி வருகின்ற இலவச மருத்துவ சேவை காரணமாக, அறவழி கிராமங்களில் வாழ்கின்ற பொருளாதார வசதி குன்றிய குடும்பங்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பையிட்டு அவர்கள் திருப்தியு, நன்றியும் தெரிவித்து வருகின்றனர்.

## சூழலைப் பாதுகாப்போம்

இப்பூமி உங்களுக்கும் எனக்கும் சொந்தமானது. பரம்பரையாகக் கிடைத்த இச்சொத்தை எங்கள் பிள்ளைகளுக்காக நாம் பாதுகாவலர்கள்போல் பராமரித்துப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

நிலம், நீர், காற்று, தாவரங்கள் மற்றும் மிருகங்கள் ஆகியன எமக்குப் பூர்வீகமாகக் கிடைத்த அருஞ்செல்வங்களாகும். இவை தமக்கிடையேயுள்ள இசைவாக்கத்தின் காரணமாக சுயமாகவே ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. நாம் இவற்றைப் புத்திசாலித்தனமாகவும், சிக்கனமாகவும் பரிபாலித்தால் மட்டுமே எமது வருங்கால சந்ததியினருக்காக இவை நீடித்து நிலைத்திருக்கும்.

அவ் உட்தொடர்புகளை எளியனவாகவும் நுட்பமானவையாகவும், இயற்கை மட்டுமே அவற்றின் இரகசியங்களை அறியக்கூடிய முறையிலும் அமைந்துள்ளன. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் மனிதன் வாழ்ந்த பின்னரும்கூட இயற்கையின் ஆச்சரியமான முறைகளைப் பற்றி நாம் சிறிதளவே அறியக் கூடியதாகவுள்ளது.

நாம் இத்தொடரை முறிப்பின் மனித வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய தீங்கான தொடர்ச்சியான எதிர்த்தாக்கங்களைக் கொண்ட இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களாவோம்.

எமது சமயச் சிந்தனைகளில் சூழலுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. நிலங்களை முறையே வகைப்படுத்தி பாதுகாத்து மகிழ்ந்தார்கள் எமது முன்னோர்கள்.

சூழலில் ஏற்படுகின்ற அழிவு மனித தார்ப்பரியத்தின் சிதைவுக்கே இட்டுச் செல்லும் எனச் சமயங்கள் போதிக்கின்றன. சமயச் சூழலில் மரமும், செடியுமாக, நீர் நிலைகளோடு ஒத்த இயற்கை வளங்கள் பேணப்படுகின்றன.

எமது மூதாதையர்கள் சூழலைப்பற்றி ஆழமான உணர்வு உள்ளவர்களாக இருந்தார்கள். எனவே இயற்கையின் கொடைகளை அனுபவித்த அதேவேளை தமது வாழ்க்கையையும் அதற்கேற்ப ஒழுங்குபடுத்திக்கொண்டார்கள். அவர்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தார்கள். நாம் அவ்வனுபவங்களையெல்லாம் மறந்து பேறுபாடின்றி சூழலை மாசுபடுத்தி வருகின்றோம்.

எனவே, நாம் இந்நிலையை மாற்றி எமது சூழலைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியின் வளமான வாழ்வுக்கு அத்திவாரம் இடுதல் மிகவும் அவசியமானதாகும்.

## அன்பு வழி

அன்புவழி இன்பவழி அமைதிவழி
அகிலம் எங்கும்
அஹிம்சை வழி
அதுவே எங்கள் அறவழி
அதுவே எங்கள் அறவழி

ஜாதி மத பேதமில்லை
நாடு என்ற கோடு இல்லை
கூடு விட்டு வான மெங்கும்
பார்த்திடுவோம்
இனம் இல்லை நிறம் இல்லை
ஆண் பெண் என்ற பேதமில்லை
அன்பு என்னும் தீபமதை ஏற்றிடுவோம்

துள்ளித் துள்ளி ஓடுகின்ற
சின்னச் சின்னப் பிள்ளைகள் நாம்
கள்ள மில்லா வெள்ளை உள்ளம்
எங்கள் உள்ளம்
எங்களுக்குள். கோபமில்லை
எதிரிகள் யாருமில்லை
எல்லோரும் எங்கள் உறவினரே

பூமி என்னும் தாய் மடியில்
தவழும் குழந்தைகளில்
யார் பெரிது யார் சிறிது
யாருமில்லையே
வானகமும் வையகமும்
யாவருக்கும் பொது — அங்கு
அன்பு செய்து இன்பமுடன்
வாழ்ந்திடுவோம்.

எஸ். திவ்வியராஜ் —வரணி

## மட்டுவிலில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

சாவகச்சேரிப் பகுதியிலுள்ள மட்டுவில் கிராமத்தில் நவம்பர்மாதம் 19 ம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதம் காரணமாக பாதிக்கப்பட்ட பதின்நான்கு குடும்பங்களுக்கும் அறவழிப் போராட்டக்குழு நிவாரணப் பொருட்களையும், உடுபிடவைகளையும் அண்மையில் வழங்கியது.

அத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளைத் திருத்திக் கொடுப்பதற்கும் குழு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

## ஊரடங்கு நீங்கியது

1987 அக்டோபர் முதல் வடபகுதியில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் தமிழர் திருநாளாகிய தைப் பொங்கல் தினம் முதல் நீக்கப்பட்டது.

பதின்நான்கு மாதங்களுக்கு மேலாக அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதால், மக்கள் தம் அலுவல்களை இரவு வேளைகளிலும் செய்யக்கூடியதாக விருக்கும் என்றதால் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியும், புதிய தென்பும் காணப்படுகின்றது,

## அறவழி சந்தா விபரம்

**இலங்கை:**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ரூபா | 3-00 |
| ஒரு வருடம் | ,, | 36-00 |
| ஒரு வருடம் (தபாலில்) | ,, | 42-00 |

**இந்தியா:**
ஒரு வருடம் (தபாலில்) ரூபா 108-00

**மத்திய கிழக்கு:**
ஒரு வருடம் (தபாலில்) ரூபா 120-00

**ஐரோப்பா:**
ஒரு வருடம் (தபாலில்) ரூபா 150-00

**அமெரிக்கா — கனடா:**
ஒரு வருடம் (தபாலில்) ரூபா 180-00

அறவழிப் பத்திரிகையைப் பெற விரும்புவோர் தமது சந்தாப்பணத்தை மணிஆடராகவோ அல்லது காசோலையாகவோ ''அறவழி தமிழ் மாதாந்தப் பத்திரிகை, க/கு இல. 2365 என எழுதித் தமது சரியான முகவரியிடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

செயலாளர்
புதிய சமுதாய வெளியீட்டகம்
த. பெ. இல. 2, சாவகச்சேரி.

அறவழி
NONVIOLENCE

# போதைப் பொருள் பாவனையை ஒழிப்பதற்கு என்ன செய்யவேண்டும்?

— டாக்டர் க. சுகுமார்

எந்தவொரு இன்பம் தரும் பழக்கத்தையும் மனிதன் பழகி விட்டால் அதைக் கைவிடுவது மிகவும் கடினமானது எனக் கூறியுள்ளார் உளவியலாளரான சிக் மண்ட் ப்ராயிட். அந்த இன்பம் தரும் பழக்கம் மனிதனை எவ்வகையிலும் பாதிக்காவிடில் பாதகமில்லை.

ஆனால் போதைப் பொருட்கள் மனிதனின் உடலையும், உள்ளத்தையும் பாதித்து மனிதனை மரண வாசலுக்குக் கொண்டு செல்கின்றது. எனவே, இறுதியில் துன்பத்தை நிச்சயமாகத் தரும் போதைப் பொருட்களை எவருமே பாவிக்கக் கூடாது.

இதனால் குடும்பம், சமூகம், நாடு போன்ற அனைத்துமே பாதிக்கப்படுகின்றன. உலக நாடுகள் பலவற்றில் சுதந்திரப் போராட்ட உணர்வை மழுங்கடிக்க இப்பொருட்கள் எதிர்ப்பாளர்களால் புகுத்தப் படுவது வழமை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒருசில பொருட்கள் மட்டும் மருத்துவத் துறையில் ஓர் குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட காலத்திற்கு மருத்துவரின் ஆலோசனையுடன் பாவிக்கப்படுகின்றன. மருத்துவக் காரணமல்லாது இன்பத்தைப் பெறுவதற்காக மட்டும் எந்தப் போதைப் பொருளையும் பாவிப்பது மிகவும் ஆபத்தானது.

போதைப் பொருட்களைப் பாவிப்பவர்கள் (குறிப்பாக ஹெரோயின்) இளவயதினராகும். பெற்றோர்கள் பிள்ளைகளின் வளர்ப்பில் மிகவும் அக்கறையுடன் இருக்கவேண்டும். இங்கு பிள்ளைகளின் உணவு, உடை, பணம்போன்ற தேவைகளுடன் மனோரீதியான தேவைகளும் (உதாரணம் அன்பு) வழங்கப்படவேண்டும். தாம் ஒதுக்கப்பட்டவர்கள், தமது தேவைகள் பூர்த்தி செய்யப் படவில்லை என்ற உணர்வு பிள்ளைகளுக்கு ஏற்படாமல் பெற்றோர் பார்த்துக்கொள்ளவேண்டும் இதைவிட மனோரீதியான பிரச்சனை உள்ளவர்களை உற்றார், உறவினர் கரிசனையுடன் கவனித்து மருத்துவ உதவியைப் பெறுவதற்கு உதவ வேண்டும்.

''வாழ்வு என்பது இன்பந் தரக்கூடியதும் பயனுள்ளதுமான ஓர் அனுபவம்'' என்ற தத்துவம் இளைஞர்களுக்குப் புரியவைக்கப் படவேண்டும். இதற்கு இளைஞர்கள் செயற்கையான உபாயங்களைப் பாவித்து இன்பம்பெற முயற்சிக்காமல், இயற்கை மாற்று வாழ்க்கை முறைகளில் ஈடுபட்டு வாழ்வை இன்பமாக்கலாம் என்ற செய்தி பெரியோராலும், ஆசிரியர்களாலும் கொடுக்கப்படவேண்டும்.

மாற்று வாழ்க்கை முறைகளுக்கு உதாரணமாக சமயம், சமூகசேவை, விளையாட்டு, நாடகம், இலக்கியம் பொழுதுபோக்குகள் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபடுவதைக் குறிப்பிடலாம். இவ்விதம் பயனுள்ள முறையில் ஒருவர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் போது வாழ்க்கையும் அர்த்தமுடையதாகின்றது.

வருமுன் காப்பதே சாலச் சிறந்தது. போதைப் பொருளைப் பரிசோதனை முயற்சியாகவேனும் பாவிக்கக் கூடாது. போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப் போதிய வசதிகள் தற்போது வடபிரதேசத்தில் இல்லை. அத்துடன் புனர்வாழ்வளித்து பழைய நிலைக்குக் கொண்டுவரக்கூடியவர்களின் எண்ணிக்கை மேற்கு நாடுகளிலேயே நூறுவீதம் அல்ல என்பதும் ஒரு முக்கியமான உண்மையாகும்.

# அறவழிப் போராட்டக் குழுவின் சேவைக்குச் சர்வதேச தோழமை இணக்க இயக்கம் பாராட்டு!

''நெருக்கடி மிக்க காலகட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் அறவழிப் போராட்டக்குழு கடந்த பல வருடங்களாக ஆற்றிவருகின்ற ஆக்கபூர்வமான பணிகளையும், செயல் திறமைகளையும் இட்டு சர்வதேச தோழமை இணக்க இயக்கம் தனது மனப்பூர்வமான பாராட்டுக்களையும், உற்சாகத்தையும் அளிப்பதில் மகிழ்வும், திருப்தியும் கொள்கின்றது''

இவ்வாறு இச் சர்வதேச அமைப்பின் தலைவராகிய, இங்கிலாந்தைச் சேர்ந்த திருமதி டயான பிரான்சிஸ் இத்தாலியிலுள்ள அசிஸி நகரில் இடம் பெற்ற மாநாட்டின் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ''எமது அமைப்பின் இலங்கைக் கிளையாக 1981-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்ற அறவழிப் போராட்டக் குழுவின் சிறப்புமிக்க செயல்திட்டங்கள் மூலம், ஐரோப்பாவில் இருக்கின்ற நாம் பல்வேறு விதமான விஷயங்களை அறியக்கூடியதாக விருக்கின்றது''

''இக்குழுவினர், இலங்கையில் இடம்பெற்ற 1983 இனக்கலவரத்தின் பின், பாதிக்கப்பட்ட அகதி மக்களுக்கு அளித்துள்ள மாபெரும் சேவையினால் ஆயிரத்துக்கு மேலான தமிழ் மக்கள் நன்மை அடைந்துள்ளனர்'' எனவும், ''வளர்ந்து வருகின்ற இலங்கை போன்ற நாடுகளில், எங்கள் அமைப்பின் கிளைகளால் ஆற்றப்படுகின்ற தொண்டுகளில், மகாத்மா காந்தியின், நிர்மாணப்பணிகளுக்கு வித்திடுவனவாக அமைகின்றன'' என்றும் தெரிவித்தார்.

இம் மாநாட்டின்போது பங்குபற்றிய சுவிற்சலாந்து, நோர்வே, டென்மார்க், மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகளின் அமைப்புப் பிரதிநிதிகளும் அறவழியின் அர்த்தமிக்க பணிகளைப் பாராட்டி, ஊக்குவித்தனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

# அறவழிக்கு வயது பத்து

அறவழிப் போராட்டக் குழுவுக்கு இவ்வருடம் பெப்ரவரி மாதம் 25-ம் திகதியுடன் பத்து வயதாகின்றது.

1979-ம் ஆண்டு பெப்ரவரி 25-ம் திகதி கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில், தந்தை செல்வா அறங்காவல் குழுவினால் பிரசவிக்கப்பட்ட அறவழி எனும் குழந்தை, தமிழ் சமுதாயத்தில் கடந்தகாலங்களில் பல்வேறு விதமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

பத்துவயதாகும் தினத்தன்று பல நிகழ்ச்சிகளை இயக்கம் நடாத்தத் தீர்மானித்துள்ளது என இவ் அமைப்பின் தலைவர் திரு. வீ எஸ். துரைராஜா தெரிவித்துள்ளார்.

## அண்ணல் காந்தியின் அமுத மொழிகள்

★ தைரியம் ஆணின் ஏகபோகமல்ல; ஆணைப் போல் தனக்கும் சுதந்திரம் உண்டு என்பதைப் பெண்ணும் உணரவேண்டும்.

★ அஹிம்சை ஒற்றுமைப் படுத்தும் சக்தி. பல்வேறான வேற்றுமையிலும் ஒற்றுமையைக் கண்டு பிடிக்கும்.

★ பகைமையால் எப்போதும் அழிவுதான். அன்பு எப்போதும் மடிவதில்லை.

★ பலாத்காரத்தால் நிலையான எதையும் ஆக்க முடியாது என்பதே எனது திடநம்பிக்கை.

★ வெளியிலுள்ள நீதிபதியை விட உள்ளத்து நீதிபதி அச்சுறுத்துவது மிகப்பயங்கரமானது.

★ தேவைகளைப் பெருக்கிக் கொள்வதல்ல, அவற்றைக் குறைத்துக் கொள்வதே உண்மை நாகரிகம். பிரார்த்தனை இரப்பதல்ல, அது ஆன்மாவின்வேட்கை.

தொகுப்பு: பிரபு

## நூல்கள் அன்பளிப்பு

யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் உப வேந்தரும், பிரபல கல்விமானுமாகிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் அறவழி நூலகத்திற்கு சுமார் இருநூறு தமிழ்—ஆங்கில நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

அறவழி நூலகத்தில் இப்போது பல நூற்றுக்கணக்கான தமிழ்—ஆங்கில நூல்கள் இருப்பது குறப்பிடத்தக்கதாகும்.

## நாடகப் பயிற்சிநெறி

நாடகத்துறையில் கதைவசனம் எழுதுதல், டைரக்ஷன், நடிப்பு, இசை அமைப்பு, அரங்க அமைப்பு போன்றவற்றில் புதிய உத்திகளைப் பயன்படுத்துவது பற்றிய ''நாடகப் பயிற்சி நெறி'' ஒன்றினை அறவழிப் போராட்டக் குழு 1989 மார்சு மாதத்தில் நடாத்தவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் 25 பயிற்சியாளர்கள் மட்டுமே இணைத்துக் கொள்ளப் படுவார்கள். ஆர்வமுள்ளோர் தமது விண்ணப்பங்களைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செயலாளர்
அறவழிப் போராட்டக் குழு
த. பெ. இல. 2
சாவகச்சேரி.

வெளிவந்துவிட்டது!

## மனித உரிமைகள் ஓர் கைந்நூல்

மனித உரிமைகள் என்றால் என்ன? அதை எவ்விதம் மனிதர்கள் பேணிப் பாதுகாக்கலாம்? என்பவற்றுக்கு விளக்கம் அளிக்கும் இக் கைநூலை இன்றே வாங்கிப் பயன் அடையுங்கள்.

விலை: ரூபா 8-50 மட்டுமே.

தொடர்பு: புதிய சமுதாய வெளியீட்டகம்
த. பெ. இல. 2
சாவகச்சேரி.

இப்பத்திரிகை புதிய சமுதாய வெளியீட்டகத்தால் யாழ்ப்பாணம் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989 தைமாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# அன்பின் வலிமை

## அன்பு என்பது பெற்றோரையும் பிள்ளையையும் பிணைக்கும் வலுவான வடம் ஆகும்

❊ **அன்பு :** உங்கள் பிள்ளை வேண்டுகின்ற அன்புச் செல்வத்தை அள்ளிச் சொரியுங்கள்.

❊ **கரிசனை :** உங்கள் குழந்தையிடம் இடையறாது நிலையான கரிசனை காட்டுங்கள். பிள்ளையின் மனோ வளர்ச்சிக்கு இது அத்தியாவசியமானதாகும்.

❊ **நேரம் :** உங்கள் பிள்ளையுடன் உங்கள் நேரத்தைச் செலவிடுங்கள். அந்தப் பொன்னான பொழுதுகள் உங்கள் கற்பனைத் திறனுக்கெட்டாத அர்த்தம் கொண்டவையாகும்.

❊ **சந்தர்ப்பம் :** உங்கள் பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் கொடுங்கள். புதியனவற்றைக் கற்றுக்கொள்ளவும், அனுபவம் பெற்றிடவும் அவை உதவும். இதனால் பிள்ளையின் சிந்தை வளமாகும்.

❊ **ஊக்கம் :** உங்கள் பிள்ளைக்கு ஊக்கம் கொடுங்கள். உற்சாகம் கொடுங்கள். கல்வி, வேலை, விளையாட்டு என்பவற்றில் இது மிக வேண்டியதொன்றாகும். ஆராய்ச்சி, பிரதி பண்ணல், ஆக்கம், கற்பனை, நிர்மாணம் என்ற துறைகளில் பிள்ளையின் முயற்சிகளுக்கு அணை போடாதீர்கள்

❊ **கடமை :** உங்கள் பிள்ளையிடம் பொறுப்பான கடமைகளை ஒபப்டையுங்கள். முலிதல் எளிதான வீட்டுப் பணிகளுடன் ஆரம்பிக்கலாம். இதன்மூலம் சிறந்த பயிற்சி கிடைக்கும். மேலும் தான் ''ஓர் பயனுள்ள பிள்ளை'' என்ற உணர்வை அது பிள்ளையிடம் உருவாக்கும்.

❊ **தனித்துவம் :** உங்கள் பிள்ளையின் ''தனித்துவத்தை'' அங்கீகரியுங்கள். உங்களைவிட வித்தியாசமான ஒருவராக விளங்கும் உரிமையைப் பிள்ளைக்கு வழங்குங்கள். மற்றைய சகோதரர் சகோதரிகளுடன் ஒப்புநோக்குதலை விட்டுவிடுங்கள்

❊ **பாராட்டு :** உங்கள் கண்மணியின் சகல வெற்றிகளையும் பராட்டுகங்கள். வெற்றி கிட்டாத பொழுது எடுத்துக்கொண்ட பிரயத்தனத்தை அதிகமாகப் பாராட்டுங்கள்.

❊ **புரிந்துணர்வு :** உங்கள் பிள்ளையிடம் புரிந்துணர்வை வளர்த்திடுங்கள். அவர்களின் செயற்பாடுகளை நீங்கள் அங்கீகரிக்காத வேளையில் அவர்களின் வயது, இயற்தன்மை என்பவற்றை கருத்தில் கொள்ளுங்கள். பிள்ளையின் நடத்தையை நீங்கள் நிராகரிக்கலாம். ஆனால் பிள்ளையை ………… வெறுத்து ஒதுக்கிவிட முடியுமா ?

❊ **உறுதிப்பாடு :** இடைவிடாது பிள்ளைக்கு மீண்டும், மீண்டும் உறுதியளித்திடுங்கள். ஒரு கணமும் பிள்ளையைவிட்டு விலகி இருக்காதீர்கள். ''அன்பை அறுத்துக்கொள்வேன், கை கழுவி விடுவேன்'' என்று ஒரு போதும் அச்சுறுத்தாதீர்கள்.

❊ **தேவைகள் :** பிள்ளைகள் வேண்டுவதை வழங்கித் தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள். அவர்களிடம் பதிலுக்கு எதையும் எதிர்பாராதீர்கள். அவர்கள் நீங்கள் ஈன்றெடுத்த செல்வங்கள். உங்களைத் தெரிந்து நாடி ஓடிவந்தவர்கள் அல்ல. பெரியோரை மதிக்கவும் பெற்றோரிடம் பிள்ளைக்குரிய பயபக்தியுடன் ஒழுகவும் கற்றுக் கொடுங்கள்.

**மென்மேலும் நீங்கள் அன்பு காட்டுங்கள்,**
**மென்மேலும் உங்கள்மீது அன்பு காட்டப்படும்.**

MOVMENT FOR A NEW SOCIETY
அன்பு அகிம்சை எளிமை

New society Publishing Centre
P.O. Bxo 2
Chavakachcheri.
SRI LANKA.

புதிய சமுதாய வெளியீட்டகம்
த. பெ. இல. 2
சாவகச்சேரி.
இலங்கை.

(அறவழிப் போராட்டக் குழுவின் வெளியீட்டுப் பிரிவு)

(இதனை உங்கள் வீடுகளில் வைத்துப் பாதுகாருங்கள்)

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.